38
# துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
Sky Tamil Media Network (Pvt) Ltd
Scan QR Code
ISSN 2792-1026

ஐந்தாவது அகவையை நோக்கிய பயணத்தில் துணிந்தெழு சஞ்சிகை...

+94757000791 magazine.skytamilnews.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் | இதழ் - 38 | 30 ஜனவரி 2025 Thuninthelu Magazine

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd



இலங்கையில் முதன்முறையாக முழு பெண் பணியாளர்களைக் கொண்ட சுற்றுலா ஹோட்டல்



உடவளவை தேசிய பூங்கா சிறப்புத் தொகுப்பு



இலக்கிய உலகில் மிளிரும் நபீல் அபாபீல்




கத்தாரில் பிரம்மாண்டமாக நடைபெற்ற சிக்டா விருதுகள்

தனித்துவமான அடையாளத்தை தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டுள்ள
## மைக்கல் மரிய ஜெயமன்
அவர்களுடனான நேர்காணல்



ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවට්) ලිමිටඩ්
sky தமிழ் Media Network
Reg No: PV 00249082



## ஜே.எம்.பாஸித்

ஸ்தாபக பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188



## எம்.எஸ்.எம்.ஸாகிர்

பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94757000791

இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே!

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**ஆலோசகர்கள் :**

புரவலர் ஹாசிம் உமர்
தெ. செந்தில்வேலவர் - பிரதம ஆசிரியர் தினகரன்
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (றஹீமி) - கத்தார்
மொஹமட் சாலிஹீன் - சிரேஸ்ட வானிலை அதிகாரி
றியாத் ஏ மஜீத் - சிரேஸ்ட ஊடகவியலாளர்

**ஸ்தாபக பணிப்பாளர்:** ஜே.எம். பாஸித்
**முகாமையாளர்:** ஹுபைப் முஸம்மில்

**பிரதம ஆசிரியர்:** எம்.எஸ்.எம்.ஸாகிர்

**நிர்வாக குழு:**
ஜபீர் எம் மஹ்ரூப் - சாய்ந்தமருது
எம்.ஆர். சப்ராஸ் - புத்தளம்
ஆஷிகா பர்சான் - கொழும்பு
ஸகியா பாறுக் - சம்மாந்துறை

**இணையாசிரியர்கள்:**
ஹப்ஸா பஹுமீர் - இறம்புக்கணை
குலசிங்கம் கிலசன் - கல்முனை
முனீரா வாஹித் - பதுளை
மஜினா உமறு லெவ்வை - மாவடிப்பள்ளி

**ஆசிரியர் குழு :**
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமென்) - கண்டி
ஏ.எம். கஸ்பியா வீவி - கல்முனை
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா - ஏறாவூர்
றிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
மொஹமட் நிப்ராஸ் - வாழைச்சேனை

**வடிவமைப்பாளர்கள்:**
ஏ.எச். முஹம்மட் ஹாரீஸ் - அம்பாறை
எம்.எச்.எம். ஷிப்கான் - பாலமுனை

**சந்தைப்படுத்தல் குழு:**
நிஹாசா நிசார் - கத்தார்
அவ்ஷபா நாகூர் - ஏறாவூர்

**இணையத்தள பொறுப்பாளர்:**
அஸ்ரி இப்னு அமீர் - அட்டாளைச்சேனை

**தொகுப்பாளர்:**
அர்சிதா அமீர் - ஓட்டமாவடி

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com

https://magazine.skytamilnews.com

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வரை நெஞ்சங்கள்
Thuninthelu Magazine
மாதந்தோறும் | இதழ் - 38 | ஜனவரி - 2025

எம்.எஸ்.எம்.ஸாகிர்
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# வாகன இறக்குமதி விடயத்தில் தள்ளாடும் அரசு

இவ்வாண்டு பெப்ரவரிக்குப் பின்பு தமக்கென்று ஒரு மோட்டார் வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு கனவு கண்ட பலரது கனவு நனவாகாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கான இறக்குமதி வரிகளை அரசாங்கம் சில நேரங்களில் அதிகரித்ததாகும். இதன் காரணமாக மோட்டார் வாகனங்களின் விலை மும்மடங்கு அதிகரிக்கும் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் குறிப்பிட்டு இருக்கின்றது.

கடந்த காலத்தில் வாகனங்களுக்கான வரி வேகமாக அதிகரித்துள்ளது. வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு பெருந்தொகையான பணம் செலவிடப்படுகிறது. அதற்காக பெருமளவு வெளிநாட்டு செலவாணிகள் கைகளிலிலே இருக்க வேண்டும். அரசாங்கம் இப்படியான பொருட்களுக்கு வரிகளை அதிகரித்திருப்பதால் மக்கள் கைகளிலே இருக்கின்ற பணம் திரைசேரிக்கு வந்து சேர்வதற்கே என்று சில பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். ஒரு பக்கத்தில் வெளிநாட்டு செலவாணியைச் செலவு செய்து ரூபாக்களைச் சேர்ப்பதில் பயன் என்ன என்று மற்றொருவருக்கு அது பிரச்சினையாக இருக்கலாம். எவ்வாறான போதும் நாட்டில் வரி மும்மடங்கில் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

தனிப்பட்ட வகையில் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை இருக்கின்றது. எனினும், வாகனங்களின் விலை நியாயமாக இருந்தாலே ஒவ்வொரு பிரஜைகளுக்கும் தமது வாகனக் கனவை நிறைவேற்றிக் கொள்ள முடியும். உலகின் பல அபிவிருத்தி கண்ட நாடுகளில் திறமையான போக்குவரத்து வசதி இருக்கின்றது. இலங்கையில் அந்த வசதிகள் குறைவாக இருப்பதும் இன்று வாகனங்களில் பயணிப்பது பெரும் சவாலாக இருப்பதும் காரணமாக பாவனையாளர்கள் தமக்கென்று ஒரு வாகனத்தை வைத்து பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கின்றார்கள். டென்மார்க், நெதர்லாந்து, ஜப்பான், ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சீனா உட்பட்ட வளர்ச்சி கண்ட நாடுகளில் சிறந்த போக்குவரத்துக் கட்டமைப்பொன்று இருக்கின்றது. அந்த நாடுகளில் நாட்டின் பணத்தில் குறிப்பிடத்தக்களவு பொதுப் போக்குவரத்துக்காக செலவு செய்கிறார்கள். வருடா வருடம் இந்தச் செலவு செய்யப்படுகின்றது.

இந்த ஆண்டின் பெப்ரவரி முதல் வாகனங்களை கொள்வனவு செய்யலாம் என்று அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கூற்றுகள் இப்போது பொய்யாகி வருகின்றது. அரசாங்கம் உண்மையில் வாகனங்களை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கு வசதிமிக்க போக்குவரத்து சேவைகளை நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்த வேண்டும். பஸ் போக்குவரத்து மட்டுமின்றி, ஏனைய போக்குவரத்துச் சேவைகளான புகையிரதப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து என்பன பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மிகச் சிறந்த பொதுப் போக்குவரத்து வசதிகள் இருக்கின்றது. ஆகவே, மக்கள் தமக்கென்று வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை குறைவு. ஆனால், இலங்கை அப்படி இல்லை. இலங்கையில் இருக்கின்ற பஸ் சேவைகள் இன்று பெரும் கொலை அச்சுறுத்தல் செய்யும் சூழ்நிலைக்கு மாறியுள்ளது. எனவே, நாட்டில் சிறந்ததொரு போக்குவரத்துக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் முனைய வேண்டும். அதன்மூலம் தான் மக்களுடைய வாகனக் கனவு நிறைவேறலாம்.

அநேகமாக புலம் பெயர்ந்து தொழில் செய்வோர் பெரும்பாலானோர் தமது தொழில் பணியை முடித்து நாடு திரும்பிய பின் ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கு விரும்புகிறார்கள். தனது வியாபாரத்தைத் தொடர்வதற்கு மற்றும் தொழில் முயற்சியைத் தொடர்வதற்கு விரும்புகிறார்கள். ஆனால், அதிக விலை கொடுத்து அவர்களால் வாகனங்களைக் கொள்வனவு செய்து கஷ்டம். சவூதி அரேபியா, குவைத், கட்டார், பஹ்ரைன் உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் அநேகர் தனது சம்பளத்தின் ஒரு பகுதியை இதற்காக சேமிக்கின்றனர். ஆனால், அவர்களுக்கு இது ஒரு சுமையாக அமையக்கூடாது.

ஆகவே, முன்னைய அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து குறிப்பிட்ட தொகைப் பணம் அனுப்புவோருக்கு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு வரிச் சலுகை வழங்குவதாக அறிவித்திருந்தது. அந்த நடைமுறை இன்று இருக்கின்றதா என்பதும் இதுவரைக்கும் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே அரசாங்கம் வெளிநாடுகளில் தொழில் புரிந்து நாட்டுக்கு பெருந்தொகையான வெளிநாட்டு செலவாணியை அனுப்பி வைக்கும் புலம் பெயர்ந்தவர்களுக்கு ஏதாவது ஒரு வாகனம் மற்றும் இயந்திரங்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு ஒரு சலுகையை வழங்குவது அவசியமாகும்.

குறிப்பாக, எதிர்வரும் ஒரு வரவு – செலவுத் திட்டத்தின் போது இது குறித்து நிதி அமைச்சர் கவனம் செலுத்துவது சிறந்தது என்பதே எமது கருத்து.

# இலங்கையில் சமூக பணி மற்றும் சமூக சேவை

## பற்றிய மக்களின் புரிந்துணர்வு மற்றும் தற்போதுள்ள நிலை

இலங்கையில் சமூகப் பணி மற்றும் சமூக சேவை மக்களின் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாகும். இவை இரண்டும் மக்களின் நலனில் மிகுந்த பங்களிப்பைச் செய்கிறது. சமூகப் பணி, சமூக சேவை பற்றி மக்களின் புரிந்துணர்வு மற்றும் தற்போதுள்ள நிலை பற்றி பார்ப்பதற்கு முன் சமூகப் பணி மற்றும் சமூக சேவை என்றால் என்ன என்பதைப் பார்ப்போம்.

சமூகப்பணி என்பது பயிற்சியையும் கல்வியையும் அடிப்படையாகக் கொண்ட பரீட்சியமாகும். மற்றும் சமூக மாற்றம் அபிவிருத்தி, சமூக நல்லிணக்கம், சமூக வலுவூட்டல் மற்றும் சமூக விடுதலையினை ஊக்குவிக்கிறது. சமூகப்பணியினுடைய மையங்களாக சமூக நீதிக்கான மூலதர்மங்கள், மனித உரிமைகள் மற்றும் கூட்டிணைந்த பொறுப்பு மற்றும் பன்மைத்தன்மைக்கு மதிப்பளித்தல். இது சமூகப்பணி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் ஏனைய சமூக விஞ்ஞானங்களின் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டு காணப்படுவதோடு, பாரம்பரிய அறிவுகளுக்கும் மதிப்பளிக்கின்றது. சமூகப்பணியானது மக்கள் மற்றும் கட்டமைப்பு (வாழுகின்ற சூழல்) என்பவற்றினால் வாழ்க்கையில் காணப்படும் சவால்களுக்கு முகங்கொடுப்பதோடு, மக்களுடைய நன்நிலையினையும் மேம்படுத்துகிறது. (IASSW 2014)

சமூக சேவை என்பது சமூக ரீதியான புண்ணியதிற்கான சேவையாகவும் சமய போதனையால் மனிதாபிமான முறையில் சமய நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் மேற்கொள்ளப்படும் உதவியாகும்.

இலங்கையில் சமூக சேவை மிகவும் பாரம்பரிய மற்றும் உணர்ச்சியின் மூலம் செய்யப்படும். அதேபோன்று சமூகப் பணியும் மனிதாபிமான அடிப்படையிலே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முக்கியமாக இலங்கையைப் பொறுத்தவரை சமூகப் பணி, சமூக சேவை இரண்டிற்கும் இடையிலான வித்தியாசம் குறைவாகவே காணப்படுகின்றன.



சமூகப் பணி மற்றும் சமூக சேவை இரண்டு துறைகளும் மக்களின் நலன்கள், செழிப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தச் செயற்படுகின்றன. இவை இரண்டுமே பொதுவாக தன்னார்வலர்களின் பங்களிப்பு, சமூக நீதி மற்றும் ஒழுக்கம், மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் போன்றவற்றை உள்ளடக்கியது. சமூகப் பணி மற்றும் சமூக சேவை ஆகிய இரண்டும் மனிதரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கருணை மற்றும் அக்கறையினைக் கொண்டுள்ளது. இவ்விரண்டு துறைகளும் சமூகத்தின் நலனில் முக்கிய பங்கு வகிக்கின்றன மற்றும் மக்களின் வாழ்வியலுக்கான ஆதரவை வழங்குகின்றன. இதுதான் சமூகப் பணி மற்றும் சமூக சேவை இடையேயான சில ஒற்றுமைகளாகக் காணப்படுகின்றன.

அதேபோன்று சமூகப் பணி மற்றும் சமூக சேவை இடையிலான வேறுபாடுகளாக, சமூகப் பணி என்பது நிபுணத்துவம் பெற்ற சமூகப் பணியாளர்களால் சமூகத்தின் நீதி, சமநிலை மற்றும் மாற்றத்தை நோக்கிச் செயற்படுவது. இது பொதுவாக நீண்டகால நோக்கங்களைக் கொண்டு சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியாகும். இதில் மன உளைச்சல், குடும்பப் பிரச்சினைகள், சமூக நிலைமைகள் போன்றவற்றைக் கையாளும் செயல்கள் அடங்கும். மாறாக, சமூக சேவை என்பது பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் நலன்களை குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யும்

முயற்சியாகும். இது பொதுவாக தன்னார்வலர்களால் அல்லது சமூக அமைப்புகளால் நடத்தப்படுகின்றது. சமூக சேவையில் மக்களுக்கு உணவு, உடை, மருத்துவ உதவிகள், கல்வி உதவித்தொகைகள் போன்றவற்றை வழங்குவது அடங்கும். இவ்வாறு, சமூகப் பணி மற்றும் சமூக சேவை என்ற இரண்டு துறைகளும் மக்களின் நலனை மேம்படுத்தும் பல்வேறு விதமான பங்குகளை வகிக்கின்றன.

சமூகப் பணி என்பது பிரிவு, வகுப்பு, சமூக வேறுபாடுகள் தவிர்த்து எல்லாருக்கும் சமமான முறையில் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் சமூகப் பணியும் சமூக சேவைபோன்று தனக்கு விரும்பியவர்களுக்கும் வகுப்பு ரீதியாகவும் செய்யப்பட்டு மக்களை தங்கி வாழும் சூழ் நிலைக்கு இட்டுச் செல்கின்றனர்.

உதாரணமாக யாசகம் கேட்டு வருபவர்களுக்கு பணம் கொடுத்தோ அல்லது உணவு வழங்குவதும் நன்று. ஆனால், அந்த யாசகத்தைப் பெறுபவர் சிறந்த உணவையும் பணத்தையும் பெற்றவுடன் அவர்கள் யாசகம் கேட்பதையே ஒரு தொழிலாகக் கொள்கின்றனர். மனிதாபிமான முறையில் செய்தாலும் அது அவரது வாழ்வை நரகமாக மாற்றுகிறது. உண்மையாக என்ன செய்ய வேண்டும் என்றால், அதாவது, சமூகப் பணி செய்பவர் அந்தத் தொழில் எந்தவொரு மரியாதை எதையும் தரப் போவதில்லை, அதேபோல யாசகம் கேட்பதால் அவருக்கு மட்டுமன்றி, அவரது பரம்பரையே இழிவான நிலைக்கு இட்டு செல்கிறது என்பதை புரிய வைத்து அவரது வாழ்க்கையை முன்னேற்றம் செய்ய உதவவேண்டும். அதனால் அவரது மதிப்பு மற்றும் அவரது பரம்பரையின் மதிப்பு என்பவற்றையும் காப்பாற்ற முடியும் .

இலங்கையில் சமூக சேவை செய்பவரும் சமூகப் பணி செய்பவரும் ஒன்றாகவே காணப்படுகின்றனர். ஏனெனில், மக்களிடையே காணப்படும் தெளிவின்மை ஆகும்.

அதேபோன்று சமூகப் பணி வளர்ச்சி மற்றும் அந்த தொழில்வாண்மைக்கும் முக்கியத்துவமும் குறைவாகவே காணப்படுகிறது. இலங்கையில் சமூகப் பணி, சமூக சேவை ஆகிய இரண்டுக்கும் இடையிலான தெளிவான வேறுபாடு இல்லாததற்கு பல காரணங்கள் உள்ளன. அவையாவன, இது



பற்றிய தெளிவின்மை, தொழில் துறையில் வளர்ச்சி குறைபாடு மற்றும் ஊடகங்களின் பங்களிப்பு என்று பல காணப்படுகின்றன. அதில் முக்கியமாக, சமூகப் பணியானது சட்டத்துறை, மருத்துவத் துறை போன்றது போல் மதிக்கப்படுவதில்லை. எல்லோராலும் சமூகப் பணி செய்ய முடியும் என்ற அறிவின்மை தான் காரணம்.

சமூகப் பணி எல்லோராலும் செய்ய முடியாது. அதற்கென்று முறையான கல்வித் தகைமை, தொழில் தகைமை, முறையான தொழில்வண்மை அமைப்புகளிலும் அங்கம் வகித்து இருக்க வேண்டும்.

சமூகப் பணியை எடுத்துக் கொண்டால் டிப்ளோமா, இளநிலைப் பட்டம், முதுநிலைப் பட்டம் போன்ற பல படித்தரங்களை கொண்டதாகக் காணப்படுகிறது. இவ்வாறான படிப்பை நிறைவு செய்த ஒருவரால் மட்டுமே முறையான சமூகப் பணியை மேற்கொள்ளலாம். மற்றவர்களால் சமூக சேவையைத் தான் செய்ய முடியும். முறையான கல்வி இன்றி சமூகப் பணி செய்தால் அது தவறான பாதைக்கே இட்டு செல்லும்.

சமூகப் பணியானது அரச மற்றும் அரச சார்பற்ற கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் சமூகப் பணியானது டிப்ளோமா தொடக்கம் முதுகலை பட்டம் வரை பல படித்தரங்களைக் கொண்டு காணப்பட்டாலும் இன்னும் தொழில் வாண்மையான அந்தஸ்தைப் பெற கிடைக்காத காரணத்தால் சமூகப் பணி என்பது தொழில்வாண்மை ரீதியாக மேற்கொள்வது இலங்கையில் சவாலாக உள்ளது. இதன்





காரணத்தால் சமூகப் பணியும் சமூக சேவையும் ஒன்றாகவே மக்களினால் பார்க்கப்படுகிறது என்பதைக் கூற முடியும்.

அதே போல இலங்கையில் சமூகப் பணிக்கும் சமூக சேவைக்கும் இடையில் வேறுபாடு காணப்படாமல் இருப்பதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்றாக இலங்கையில் இன்னும் சமூகப் பணியாளருக்கான அனுமதிச் சான்றிதழ் இல்லாமையாகும். அதனால் தான் மக்களிடையே ஓர் அலட்சிய போக்கு அதாவது மதிப்புக் குறைவாகவே காணப்படுகிறது. இதனாலே தான் இலங்கையில் சமூகப் பணியானது துர்ப்பாக்கிய நிலையில் காணப்படுகிறது. இதனால் தான் சமூகப் பணியும் சமூக சேவையும் வேறுபாடு குறைவாக காணப்படுகிறது. இதுவே வெளி நாடுகளில் சமூகப் பணியாளருக்கும், சமூக சேவையாளருக்குமான மரியாதையானது வைத்தியர்கள், ஆசிரியர்களை விட அதிகமாகும்.

பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் அரசின் ஆதரவுகள் குறைவாக காணப்படுவதால் தான் இன்னும் குறைவாக மதிப்பிடுகின்றனர். அதேபோன்று சமூகப் பணி தொழில் துறைகளில் வெவ்வேறு துறைகளில் தொழில் செய்யக் கூடியவர்களும் வேலை செய்கின்றனர். அதை இல்லாமல் செய்து சமூகப் பணியாளருக்கான ஒரு முன்னுரிமையை வழங்கி சமூகப் பணி மற்றும் சமூக சேவை தொடர்பாக ஊடகங்களில் விரிவாகவும் சரியான கருத்துக்களையும் பகிர வேண்டும். அதேபோன்று இவை இரண்டும் வெவ்வேறு என்பதை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி மக்களுக்கு தெளிவூட்டுதல் அவசியமாகும்.

இலங்கையில் சமூகப் பணி மற்றும் சமூக சேவைகள் மக்களின் நலனில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள், சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் போன்ற துறைகளில் குறிப்பாக உதவுகின்றன. மக்களிடம் சமூக சேவை மற்றும் சமூகப் பணி தொடர்பான புரிந்துணர்வு உயர்ந்த நிலையில் உள்ளது. மேலும் தன்னார்வ அமைப்புகள், அரசாங்கம் மற்றும் அறக்கட்டளைகள் மூலம் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் சமூகத்தில் நிலையான மாற்றங்கள், நலன்கள் மற்றும் ஒழுக்கம் ஏற்படுகின்றன. சமூக சேவை மற்றும் சமூகப் பணி மூலம், ஒரு நம்பிக்கையான மற்றும் சரியான சமூகத்தை உருவாக்க முடியும் என்பதை மக்களுக்கு புரியவைத்துள்ளது. இதனால், சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியும் மாற்றத்தை ஏற்படுத்துவதில் பங்கு பெறுகின்றது.

இதுவே இலங்கையில் சமூகப் பணி மற்றும் சமூக சேவை பற்றிய மக்களின் புரிந்துணர்வு மற்றும்

S.F.SHEEMA
BSW/23/24/T41
Faculty of social work, 1st year,
National institute of social development.




வீரகனூர் ஆ. இரவிச்சந்திரன்
சேலம்

# ஆண்டு புதியது

கனவுகள் தொடர கருத்தில் புதியது..
இனிமை தேடிய இதயம் இளமையில்..!
வலிமை மனதில் வசந்தம் மணக்க...
வாழ்க்கை நடத்தும் வறுமை வென்று

தெளிவில் தொலைத்த ஞானம் எங்கே
தெரிந்து விழுந்த வளர்ச்சி மோகம்
தினமும் பொழியும் ஒளியும் வழியும்
தெய்வம் மதிக்க காதலும் வீரமும்

தேடிய புகழும் அன்பின் உள்ளம்
வன்மம் இல்லாத வளமும் வரமே
இல்லறம் மணமும் நல்லற வாசல்
இதயம் போற்றும் அன்பே ஆற்றல்

வெறுப்பை நீக்கிய விருந்தும் மருந்தே.
வெறுமை இல்லாத உண்மை உறவு
தானமும் தவமும் இறையென புகழே
தடமென காட்டிய தாய்மை அழகே..!

திகதிகள் கிழிந்து தேடலைத் தூண்டி ..
உரிமைகள் பிறந்து உயர்வு வந்திட..
புதியன படைத்து வசதிகள் குவித்து
வாரி வழங்கி அள்ளி கொடுத்து..!

அனைவரும் மகிழும் அதிசயம் செய்து
எல்லை இல்லாத இன்பம் காணும். ..!
இனிமை ஆண்டே இடர்கள் நீங்க..
இதயம் தழுவிடும் ஆண்டே வருக..!

# ஆத்தங்கரை ஓரத்தில காத்திருக்கேன் மச்சானே!

மல்லுவேட்டி கட்டிக்கிட்டு
மயினராட்டம் போரமச்சான்
அத்தைமக நிக்கையிலே
பாக்காம போறீகளே!

முறுக்கு மீசைய முறுக்கிவிட்டு
மிடுக்கா நீ நடக்கையிலே
ஜிவ்வுன்னுதான் ஆகுதைய்யா
என்னென்னவோ தோணுதைய்யா?

பணத்தாச வந்துதானே
பட்டணம் போனீக!
பட்டணம் போனதுமே
என்ன ஏ மறந்தீக?

அடிமனசுல ஒன்னவச்சி
ஒ நெனப்புலதான் வாழுறேன்
கிட்ட நீ வந்தாலே
தவளையாத்தான் ஓடுறேன்.

சந்தைக்கு போறமச்சான்
சாயங்காலம் வரும்போது
தாலிக்கொடி வாங்கிக்கிட்டு
மறக்காம வந்திடுங்க.

ஆத்தங்கரை ஓரத்தில
காத்திருப்பேன் மச்சான்
காதும்காதும் வைச்சதுபோல்
தாலியத்தான் கட்டிடுங்க.

கல்யாணத்த பண்ணிக்கிட்டு
ஆத்தாலுக்கும் சொல்லிடலாம்
வேலிய பிரிச்சிப்புட்டு
நம்ம காரியத்த
முடிச்சிடலாம்.



கவியருவி றிபான்
அட்டாளைச்சேனை - 15

சிறுகதை தொகுப்பு

# ஸ்பேஸ்

**திகதி – 6019.02.24, சனிக்கிழமை. இற்றைக்கு 3997 வருடங்களின் பின்னர்,**

ஆட்டோமடிக் தேனீர் இயந்திரத்திலிருந்து இரண்டு தேனீர் கோப்பைகளை ட்ரேயில் சுமந்தவாறு பஞ்சு, தனது உருளைப்பாதங்களால் டைல்ஸ் தரையை சிரைக்காதவண்ணம் சுகுனாவிடத்தில் வந்து சேர்ந்தது.

பஞ்சு என்பது ஒரு குள்ளமான ரோபோ. உருளை வடிவ உடலின்மேல் பெட்டியான தலை, ஐம்புலன்களில் இரண்டை சென்சர்களால் சமப்படுத்தியிருக்கும் ரோபோ. அந்த உருளை வடிவ வயிற்றில் கொரில்லா க்ளாஸ் டிஸ்பிளே, இரண்டு கைகள் மற்றும் வயிற்றினுள் இருந்து பிரசவிக்கும் மூன்றாவது கையும் இன்ன பிற ஐட்டங்களும் என அறைக்கடக்கமான லேட்டஸ்ட் டெக்னோலொஜி, ஒரு சேர்வன்ட் ரோபோ.

சுகுனாவின் கணவர் அவள் பிறந்தநாளுக்காய்ப் பரிசளித்து இன்றுடன் மூன்று வருடங்கள் சொச்சம். ரொம்ப நல்ல வேலைக்காரன். ஒரு முறை கிறீஸை கக்கியிருக்கிறான். மூன்று மாதத்துக்கொருமுறை ஏதாவது போல்டை லூசாக்கிக்கொள்வான். இதைத்தவிர பஞ்சுவிடம் பழுதுகள் என்று எதுவும் பெரிதாய் இருந்ததில்லை. செமி வாட்டர் ப்ரூப், தண்ணீரிலிருந்து பாதுகாப்பு இருந்தாலும் தண்ணீருக்குள் இறங்கி வேலை செய்ய முடியாது. பக்கத்து வீட்டு லின்சியிடம் முழுவதும் வாட்டர் மற்றும் ஹீட் ப்ரூப் வேர்சன் இருப்பதுதான் பஞ்சுவிடம் சுகுனா கண்ட ஒரேயொரு குறை. மற்றபடி வேளைக்கு அவனே சார்ஜ் போட்டுக்கொள்வான். போய் ஒரு ஓரத்தில் நின்றுகொள்வான். எல்லா ஆட்டோமடிக் சமயல் இயந்திரங்களின் சுவிட்சையும் போடுவான், அவற்றின் வயிற்றுக்குள்ளிருந்து வெளியாகும் உணவைப் பரிமாறுவான். ஆனால், கதை என்னவோ பஞ்சுவைப் பற்றியதல்ல.

அன்று சுகுனாவின் பள்ளித்தோழி வந்திருந்தாள். பாடசாலை முடித்துவிட்டு தன் சொந்தக் கிரகத்துக்கே மேற்படிப்புக்காகச் சென்றவள். பல ஒளியாண்டுத் தொலைவில் இருப்பதாலும், ஸ்பேஸ் இன்வேடர் ரெகுலேஷன்ஸ் இனாலும் சுகுனாவின் திருமணத்திற்கு வரமுடியவில்லை. பெயர் ஸ்பிவ், அந்தக் கால பாடசாலைப் பருவங்களில் மனிதர்கள் ஏலியன்கள் என எல்லோரையும் கிறங்கடிக்கச் செய்தவள். இப்போதும் அதே கட்டுக்கோப்புடன், தனது மென் சிவப்பு நிற தேகத்தில் பொருந்திய வளைவுகளாகட்டும், கன்னத்தின் இரு பக்கமும் காணப்படும் மூன்று வெட்டுக் கோடுகளாகட்டும், நீல நிறக் கேசமும் பின்னால் தொங்கும் முயல்போன்ற பஞ்சு வாலாகட்டும், அனைத்தும் அவளுக்காய் செவ்வனே செய்தது போன்று இருந்தன.

ஸ்விங்கிங் சேரில் ஆடிக்கொண்டே சுகுனாவும், ஸ்பிவ் உம் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும் போது,



பஞ்சு தேனீரைக் கொண்டு வந்து கொடுத்தான். "அப்புறம் லைப்ல ஒன்னும் சேஞ்ச் இல்லியா! இன்னிக்கி சடடே தானே, எங்க அவர்?" ஸ்பிவ் கேட்க, சுகுனா புலம்ப ஆரம்பித்தாள்.

"அத ஏன் கேக்குற அவரு இப்பல்லாம் வேளைக்கு வர்ரதேயில்ல, கேட்டா ஒபீஸ்ல பிஸிங்குறார். ஒபீஸ் மேட்ஸ் கிட்ட கேட்டா அவங்கல்லாம் தெரியாதுனும்,

அப்படி பிஸியா இருக்க வாய்ப்பில்லனும் சொல்லி கையை விரிக்கிறாங்க. அதுலயும் அந்த மார்க்கும் ஸ்டீவும் தங்களோட நாலு நாலு கையையும் விரிக்கிறாங்க. ஒரு நாள் ஒரு டிடக்டிவ்வை ஹயர் பண்ணினேன் பாரு...."

என்ன ஆச்சு? ஸ்பிவ்வின் கன்னத்திலிருந்த கோடுகள் புளோரொசென்ட் ஒளியை விடுவித்து அவளின் ஆர்வத்தைக் புலப்படுத்தியது.

"அத ஏன் கேக்குற, அந்த டிடக்டிவ் ஒரு க்ளோப்லடன் காரன். மூணு கண்ணு வேற, பாடி பார்ட்ஸ் எல்லாம் வெட்ட வெட்ட முளைக்குது, அப்பப்பா...... அவன்கூட ஒரு 7C டைப் ரோபோ கூட இருக்கு, போற வர்ரவங்களை எல்லாம் அனலைஸ் பண்ணி பாடி ஹெல்த் கண்டிசன் வரைல சொல்லுது"

"க்ளோப்லடன் காரன்கிட்ட 7C டைப் ரோபோவா, என்னடி இது இருபத்தோராம் நூற்றாண்டு பிச்சக்காரன் கிட்ட பி.எம்.டபள்யூ கார் இருக்குற கதையால்ல இருக்கு"

"எங்கயோ குப்பைல பெறுக்கி செஞ்சு எடுத்திருக்கான் போல, பையன் படு ஸ்மார்ட், மூன்றே மணிநேரத்துல வந்து ரிப்போர்ட் குடுத்துட்டு போனான். என் அன்பான கணவர் யாரோ ஒருத்திகூட விடிய விடிய சுத்துரார்னு, போட்டோ வீடியோ எல்லாம் மை டிரைவ்ல போட்டு கொடுத்துட்டுப் போனான், அவளைப் பாக்கவே சகிக்கல. பச்ச கலர்ல, மூஞ்சில ரெண்டு டெண்டகல்ஸ் வேற. முடி கூட இல்லை, மொட்டைத்தலையில ரெண்டு கோடு, நீட்ட வாலும் இருக்கு, எந்த கிரகக்காரியோ இங்க வந்து என் உயிர எடுக்கிறா!"

"உனக்குத் தெரியும்ங்கிறது அவருக்குத் தெரியுமா?"

"இன்னும் இல்லடி, எனக்கு உடம்பு சரியில்லைனு சொல்லி மன்டே ஹாஸ்பிடல் போக டைம் கேட்டிருக்கேன்"

"உடம்புக்கு என்ன?"

"உடம்புக்கு ஒன்னுமில்லடி, அவரைக் கூட்டிட்டுப் போயி மெமரி டெலீட் பண்ணப்போறன், அவளோட மெமரீஸ் மட்டும்"

"அப்போ அவள என்னடி பண்ணப்போற?" மறுபடியும் ஸ்பிவ் கன்னத்தில் புளோரொசென்ட் ஒளிர்வு.

"அவகிட்ட டீல் பேசணும் ஒத்து வரலையின்னா கான்ட்ராக்ட் கில்லர வச்சு கதைய முடிச்சிட வேண்டியதுதான்"

"நீ இன்னும் மாறவேயில்ல!, ஆஹ்.... மெமரி டிலீட் பண்றது உயிருக்கு ஆபத்தாச்சே, அத கூட பேன் (தடை) பண்ணியிருந்தாங்களே!"

"அது நீயும் நானும் ஸ்கூல் படிக்கும்போது, இப்போ அதுக்கு ஆல்டர்நேட்டிவ் ப்ரீகொசன்ஸ்லாம் வந்துட்டு டி!"

"என்னதான் மாறினாலும் இந்த தேனீருக்கு மட்டும் யாராலயும் றிப்லேஸ்மண்ட் கண்டுபிடிக்க முடியல பாத்தியா!"

இருவரும் கல கலவென சிரித்துக்கொண்டிருந்தனர். ஸ்பிவ்வின் கையிலிருந்த ஸ்மார்ட் மீடியா டிவைஸ், அடுத்த வேலைக்கு நேரமாகிவிட்டதை உணர்த்துவதற்காய் அலார்மைப் பிறப்பிக்க விடைபெற்றுக்கொண்டு எழுந்தாள்.

**சிறுகதை ஆக்கம்:**
**அ.ஜ.அ.ஆஹ்ராஸ்**
**மருதமுனை**

# ஆக்கிரமிப்பு

சடுதியாக அதிகரித்த
சமூக வலைகள்
சந்தர்ப்பம் பார்த்து
சந்ததிகளையே அழித்திடும்
மாய வலைகள்

கொரோனாவின் கோரத்தால்
நிரம்பி வழியும்
கையடக்கத் தொலை பேசியலைகள்
கொத்தாகவே வெறியேற்றிடும் கோபப்
பேரலைகள்

இரத்த உறவுகளை
உதறித் தள்ளும்
உறங்கா விழிகள்
இருக்கும் மன உணர்வுகளையும்
சிதறக் கொல்லும்
இருண்ட வழிகள்

உலகமே உள்ளங்கையில் அடங்கி
ஆட்டிப்படைக்கிறது
கலகமே காணும் இடமெங்கும்
கனத்து வாட்டி வதைக்கிறது

இறைவனுக்குத் தான் நாம்
அடிமைகள் எங்கும்
உலகமே இணையத்தில் இடம் பிடித்து
கணம் சிதைக்கிறது

உண்மை உணர்வுகளை இரசனைகளை
உதாசீனப்படுத்தி
உறங்காமலே உருக்குலைக்க கழித்திடும்
பொழுதுகளை கோபப்படுத்தி
சமூகத்தின் சீர் கேடாய்
திகழ்த்திடும் சமூக வலைகளிலிருந்து
சந்ததிகளை பாதுகாத்திடுவோம்
தீமை உணர்த்தி!

பசீல் பாத்திமா தில்சானி
நிந்தவூர்

# ஆளுமை அறிமுகம்

## மைக்கல் மரிய ஜெயமன்



**ஊடகமானது ஆக்கும் மற்றும் அழிக்கும் சக்தியைக் கொண்டது. எனவே ஊடகத்தை உங்களது சமூகத்தின் மறுமலர்ச்சிக்காகவும் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

மைக்கல் மரிய ஜெயமன் அவர்கள் மத்திய மலைநாட்டின் நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த இராகலை மல்லிகைபூ என்ற அழகிய கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். மைக்கல் மற்றும் பரமேஸ்வரி அவர்களுக்கு பிறந்த புதல்வனாவார். இவரது தாய் மற்றும் தந்தை இருவருமே ஆசிரியர்களாவர். இவரது பெற்றோருக்கு இவருடன் சேர்ந்து மூன்று பிள்ளைகளாகும். மூத்த சகோதரி மரிய ஜெஸ்லின் அவர்கள் அரச நில அளவையாளராகவும் இளைய சகோதரி மரிய ஜெஸ்மின் அவர்கள் ஆசிரியராகவும் பணிபுரிகிறார்கள். இவருக்கு அனைத்து விதத்திலும் பக்கபலமாக இவரது மனைவியான ஹசினி ஹிமாஷா சேரம் அவர்கள் இருப்பதோடு, இவர் ஊடகவியலாளராக வெரிடாஸ் வானொலியில் பணிபுரிகிறார். இவர்களுக்கு மூத்த மகள் மரிய ஜொஹேன் என்டோனியா, இளைய மகள் மரிய ஜெஹேன் அனாலியா என்கின்ற இரு புதல்விகள் உள்ளனர்.

இவர் தனது ஊடக பயணத்தை ஆரம்பத்தில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவே ஆரம்பித்தார். பின்னர் செய்தி வாசிப்பாளராகவும் நேத்ரா தொலைக்காட்சியின் தயாரிப்பாளராகவும் வானொலி அறிவிப்பாளராகவும் தேசிய லொத்தர் சபையின் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் தேசிய நிகழ்ச்சிகளின் அறிவிப்பாளராகவும் சர்வதேச விளையாட்டு போட்டிகளின் அறிவிப்பாளராகவும் நேரடி வர்ணனையாளராகவும் பின்னணி குரல் கலைஞராகவும் தொலைக்காட்சி விளம்பர, நாடக நடிகராகவும் தேசிய அறிவிப்பாளர் போட்டிகளின் நடுவராகவும் ஊடகக் கல்வி பயிற்றுவிப்பாளராகவும் சிறகுகள் ஊடக வலையமைப்பு மற்றும் ஜெயம் ஊடக வலையமைப்பின் ஆலோசகராகவும் பல வகிபாகங்களில் தனது தனித்துவமான அடையாளத்தை ஊடகத்துறையில் நிலைநிறுத்தியுள்ளார் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.



தனித்துவமான அடையாளத்தை தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டுள்ள மைக்கல் மரிய ஜெயமன் அவர்களுடனான நேர்காணல் இது..

1. நீங்கள் கல்வி கற்ற பாடசாலைகள் மற்றும் கற்கைகள் பற்றி ?

ஆரம்பத்தில் வலப்பனை ஹரஸ்பெத்த தமிழ் வித்தியாலயத்தில் கற்றதோடு, தொடர்ச்சியாக இராகலை தேசிய கல்லூரி, ஹட்டன் பொஸ்கோ கல்லூரி, மாத்தளை இந்துக் கல்லூரி, கண்டி ரணபிம றோயல் கல்லூரி என்பவற்றில் எனது கல்வியை நான் தொடர்ந்துள்ளேன். மேலும் வெகுசன ஊடகமும் தொடர்பாடலும் துறையில் இளங்கலைமாணி பட்டத்தை பூர்த்தி செய்துள்ளேன். இறையியல்-கிறிஸ்தவ கற்கை துறையில் இளங்கலைமாணி மற்றும் முதுமாணி பட்டங்களைப் பெற்றுள்ளேன்.

2. செய்திப்பிரிவில் உங்கள் பயணம் எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது?

குறித்த ஒரு முக்கிய செய்தியை (breaking News) வாசிப்பதற்காக ஊடகத்தில் இருந்து இரவு 10 மணியளவில் அழைப்பு விடுக்கப்பட்டு, செய்தி வாசிக்க அலுவலகத்தில் அத்தருணத்தில் யாருமற்ற நிலையில் முன் ஆயத்தங்கள் பயிற்சிகள் இன்றி செய்தியினை வாசித்து விட்டு வர, தொடர்ந்து வந்த பாராட்டுக்கள், வாழ்த்துகள் மூலம் எனது செய்தி வாசிப்பாளர் பயணம் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது.

3. உங்களுக்கு வேறு துறைகளில் பாண்டித்தியம் இருக்கிறதா?

நான் நாடகம் நடித்திருக்கிறேன். அது தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் வேறு திறமைகளை அடையாளம் காணும் ஒரு நிகழ்ச்சியில் நான் why this kolaveri என்ற பாடலை பாடினேன். பரத நாட்டியம் பயிற்சி பெற்று புஷ்பாஞ்சலி ஒன்றிற்காக நடனமாடியிருக்கிறேன்.

கவிதை எழுதுவது ரொம்பவே பிடிக்கும். ஆனால் இப்போது பெரிதாக எழுதுவதில்லை. mimicry செய்வது ஒரு பொழுதுபோக்காகவும் நகைச்சுவையாகவும் பாடசாலை காலத்தில் இருந்ததுண்டு. கட்டுரை எழுதுதல், பேச்சு பேசுதல் ஓவியங்களை வரையும் பழக்கமும் உண்டு. எனவே கலைத்துறையினை மிகவும் பிடித்த ஒரு நபராக நானும் திகழ்கிறேன்.

4. நீங்கள் அறிவிப்பாளராக உணர்ந்த தருணம்?

சிறு வயதிலிருந்தே தமிழ் தினப்போட்டிகளில்




பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றியுள்ளேன். தந்தையின் எழுத்திலும் தாயினுடைய பயிற்சியிலும் நான் போட்டிகளில் வெற்றி வாகை சூடிக் கொண்டேன். பின்பு உயர் தரத்தில் என்னாலும் பேச முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் பேச ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் எனக்கு வசந்தம் டிவி, தமிழ் ஓசை மற்றும் வெற்றி FM போன்ற ஊடகத்தில் பணிபுரிந்த அனுபவத்தினாலும் 2010 இற்குப் பின்னர் ரூபவாஹினியிலும் நேத்ரா அலைவரிசையிலும் பல சிரேஷ்ட அறிவிப்பாளர்களின் வழிகாட்டலினாலும் அவர்களுடன் சேர்ந்து பணிபுரிந்த அனுபவத்தினாலும் என்னாலும் சிறப்பான முறையில் அறிவிப்பு செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கை என்னுள் வந்தது எனலாம்.

5. நீங்கள் ஊடகத்துறையில் பெற்ற விருதுகள் எவை ?

ஊடகத்துறைக்காக சாகித்திய விருது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அறிவிப்பு மற்றும் பேச்சு துறைக்கான விருதுகள், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் மற்றும் தேசிய கத்தோலிக்க தொடர்பாடல் மத்திய நிலையத்தினால் வாழ்வில் ஒரு முறை மாத்திரமே வழங்கப்படும் தர்மபிரபாஸ்வர விருது, People's Excellency Award-2024, சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர், தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர், தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர் ஆகிய மூன்று துறைகளுக்கும் விருதுகள் கிடைத்துள்ளன. மேலும், People Pinnacle Award-2024, CMB TALKS DIGITAL AWARD, MOST POPULAR MEDIA PERSON-2024 என்பவைகளை பெற்றதோடு, Raigam விருது மற்றும் அரச விருது ஆகியவற்றுக்கு பலமுறை பரிந்துரைக்கப்பட்டுள்ளேன்.

6. நீங்கள் தொலைகாட்சியில் பணிபுரியும் போது எதிர்கொண்ட சவால்கள், அதனை எவ்வாறு தீர்த்துக் கொண்டீர்?

கொழும்பில் ஊடகத்தின் அலுவலகம் அமைந்துள்ள போது பிற மாவட்டத்திலிருந்து வருகை தரும்போது எனக்கு தங்குவதற்கு ஒர் இடம் கிடைப்பதும், அச்சூழலிற்கு என்னை பழக்கப்படுத்திக் கொள்வதும், அச்சூழலிற்கமைய எனது பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதும் ஒரு பாரிய சவாலாக இருந்தது. தலைநகரத்தில் உள்ள எனது சகோதரர்கள் எனக்கு உதவி புரிந்தார்கள். எனது குடும்பம் எப்போதும் எனக்கு ஒத்துழைப்பாக இருந்தது. பின்னர் வேலை வாய்ப்பு







சிறப்பாக கிட்ட வருமானமும் உயர தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு சிறப்பாக அமைந்தது.

அறிவிப்புத் துறையில் உச்சரிப்பும் ஒரு சவாலாக ஆரம்பத்தில் இருந்தது. ஏனெனில் தமது சொந்த ஊரில் உள்ள தமிழ் பேச்சு வழக்கு தான் சிறந்தது என்று கருதுவோம். ஆனால் அவ்வாறில்லை என்பதே உண்மையாகும். நியமத் தமிழினை கற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. பல பயிற்சிகளினூடாகவும் முயற்சிகளினூடாகவும் கற்றுக் கொண்டேன்.

**7. நீங்கள் ஊடகத்துறை சார்பாக சமூகத்துக்கு கூற எத்தனிக்கும் கருத்துக்கள்?**

அறிவிப்புத்துறை என்பது பரந்துபட்ட அனைவருக்கும் பொதுவானதொன்றாகும். உங்களை வளர்த்துக் கொள்ள அரசு, தனியார், டிஜிட்டல் ஊடகங்கள் என பல ஊடக வாய்ப்புக்கள் இளைய தலைமுறைக்கு காணப்படுகின்றன. எனவே அதனை என் அன்புக்குரிய தம்பி தங்கைகள் பயன்படுத்தி உங்களை வளர்த்துக் கொள்ள முடியும் என்பதும் தீங்கு விளைவிக்கக் கூடிய செய்திகள் மற்றும் பக்கச்சார்பான வன்முறையை தூண்டக்கூடிய செய்திகளை நம்பாது அது பற்றி விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

சமூக ஊடகங்களை பயன்படுத்துபவருக்கு எனது அன்பான வேண்டுகோள், செய்திகளை அவசரமாகவும் மக்களிடையே சென்றடைய வேண்டும் நோக்கில் பகிரப்படும் செய்திகளில் ஒருவருடைய மரியாதையை இழக்கும் வகையில் எந்த செய்திகளையும் பகிர வேண்டாம். ஊடக ஒழுக்கத்தினை பின்பற்றி செய்திகளை வழங்குங்கள்.

ஊடகமானது ஆக்கும் மற்றும் அழிக்கும்

சக்தியைக் கொண்டது. எனவே ஊடகத்தை உங்களது சமூகத்தின் மறுமலர்ச்சிக்காகவும் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுடைய இந்த பணி நல்ல ஆக்கபூர்வமான செயல்களுக்கு வித்திடும் வகையில் இருக்க வேண்டும். மாறாக விளம்பரத்திற்காக, தற்புகழ்ச்சிக்காக இல்லாது மக்களுக்கு தேவையானவற்றை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இருக்க வேண்டும்.

**8.மலையக மக்கள் பற்றிய உங்கள் பார்வை யாது?**

ஒவ்வொரு மனிதனும் தனது பிறந்த மண்ணுக்கு சமூகத்துக்கு ஏதாவது ஒரு சிறந்த காரியத்தை செய்திருக்க வேண்டும். மலையக மக்கள் 200 வருட வரலாற்றைக் கொண்டவர்கள். இவர்களுக்கு சென்றடைய வேண்டிய அனைத்து உரிமைகள் மற்றும் நலன்கள் முழுமையாக சென்றடையுமாக இருந்தால் இச்சமூகம் மென்மேலும் வளர்ச்சி அடைந்திருக்கும். ஆனால் ஏனைய சமூகத்திற்கு கிடைக்கும் அளவு கூட எமது சமூகத்திற்கு கிடைக்காதது தான் வறுமையில் இருப்பதற்கு ஏதுவான காரணியாக இருக்கிறது. மலையக மாணவர்களின் கல்வியினால் தான் எமது சமூகம் இன்று தலைநிமிர்ந்துள்ளது. அதாவது அவர்களின் பெறுபேற்றின் அடிப்படையில் எமது சமூகம் வளர்ச்சி அடைந்து வருகிறது. இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் மலையக மக்களின் உழைப்பு அவர்களது வாழ்க்கைக்கு போதுமானதாக இல்லை. பல உழைப்பாளிகள், சமூக ஆர்வலர்கள், ஆசான்கள் உட்பட எமது சமூகத்தை வளர்ச்சியின் பாதையில் இட்டுச் செல்கிறார்கள். எமது மலையக மக்களின் தேவைப்பாடுகள் வேறுபட்டதாக காணப்படுகின்றது. அதனை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை பொறுப்புக்குரியவர்கள் செய்ய வேண்டுமென பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**9.மலையக மைந்தனாக தாங்கள் மலையக மக்களுக்கு கூற நினைக்கும் விடயம் யாது?**

எங்கள் மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க ஊடகத்துறையினூடாக எத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள முடியுமோ அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு எங்கள் மலையக மக்களின் மறுமலர்ச்சிக்காக நான் எப்பொழுதும் துணை நிற்பேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

***10. உங்களது இலக்கு பற்றி கூறலாமே?***

ஊடகத்துறையில் எனக்கான ஒரு தனி இடத்தை பதிக்க வேண்டும்.
எனவே நான் ஊடகத்துறை தொடர்பான கல்வியை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கிய வண்ணமாக உள்ளேன். அதனூடாக ஊடகத் துறையில் சிறந்த ஆளுமைகளை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும். இத்துறை அனைவருக்கும் பொதுவான துறையாக எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும் என்பதே எனது இலக்காகும். அறிவிப்பு துறையில் ஆர்வமுள்ள தம்பி தங்கைகளுக்கு அது தொடர்பான பயிற்சியை JEYAM MEDIA ACADEMY ஊடாக வழங்கிய வண்ணம் உள்ளேன். அதனூடாக அறிவிப்பு துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு நாம் கற்றதை கற்றுக் கொடுத்து, ஊடகத் துறையில் பயணிக்க துணைபுரிகிறேன்.

***11.எமது ஊடகமான ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பற்றி கூறுங்களேன்?***

ஸ்கை தமிழ் ஊடகத்துக்கும் துணிந்தெழு சஞ்சிகையிற்கும் எனது உளமார்ந்த



நன்றிகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களோடு இணைந்து பயணிக்க கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், ஸ்கை தமிழ் ஊடகத்தின் துணிந்தெழு சஞ்சிகையில் சிறப்பான முறையில் ஆளுமைகளை அறிமுகப்படுத்தி அதனை தொகுத்து வழங்குவதில் திறம்பட செய்கின்ற ஆசிரியர் குழுவிற்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மூத்த ஆளுமைகளின் நேர்காணலை பார்வையிடும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. மிகவும் நேர்த்தியான முறையில் தொகுக்கப்பட்டிருந்தது.

ஸ்கை தமிழ் ஊடகமானது மென்மேலும் வளர மனமார வாழ்த்துவதோடு, இவ் ஊடகத்தோடு இணைந்து செயற்படும் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய தொழில்நுட்ப உலகில் சிறப்பான முறையில் இளம் தலைமுறையினராக நீங்கள் செய்யும் பணிகள் அளப்பரியது. மென்மேலும் உங்கள் பணி வையகம் சிறக்க தேசிய தொலைக்காட்சி சார்பாக வாழ்த்துகிறேன்.







**நேர்காணல் :**

## ஹப்ஸா பஹ்மீர்

**இணையாசிரியர்,**
**துணிந்தெழு சஞ்சிகை**

# பேதங்கள் மறந்து பேரன்போடு பயணிப்போம் வாரீர்!..

நீ என்றும்
நான் என்றும் ஓடிக்
கொண்டிருக்கிறோம்.
நிரந்தரமில்லா
இவ் உலகினிலே..

நாம் என்று வாழ
அழைத்து நிற்கிறோம்
தேசிய ஒருமைப்
பாட்டிற்காய்..

நாற்திசையும் சிதறி கிடக்கும்
இலங்கைத் தாயின் தத்துப்
பிள்ளைகள் நாங்கள்..

வடக்கின் உச்சியில்
வானுயர்ந்த பனையும்
பவித்திரம் நிறைந்த
நல்லூர் கோயிலும்
நல்லசிவம் ஐயாவும் அங்கிருக்க,

தெற்கின் விழிம்பில்
பியதாச மாமாவும்
கதிர்காம கந்தனும்
மத்தியிலே மஞ்சுலாவும்
தலதா மாளிகையும்,

கிழக்கே மீன்பாடும் தேன் நாடும்
பிட்டுக் குழலும் தேங்காய் பூவும்
போல பிரியாத எம் சொந்தங்களும்
அக்லா பள்ளியும்
அம்மன் கோயிலும் என
கொஞ்சி விளையாடும்
செல்லக் குழந்தைகள் நாங்கள்..

ஜாதி, மதம், இனம், மொழி
என வேறுபட்டாலும்
இரத்தத்தால் ஒன்றுபட்டவர்கள்
நாங்கள்..
மாம்பிஞ்சு போல்
வளைந்து நெளிந்து இருந்தாலும்
இலங்கையர் என்ற ஒற்றைக்
கோட்டில் ஒன்றுபட்டவர்கள்..

கடந்து வந்த பாதைகளில் சில
கசப்பான அனுபவமும் உண்டு..
நினைத்துப் பார்க்கையில்
நெஞ்சில் பாரமும் உண்டு..

இரத்தமும் சதையும் கொண்ட
மண்திண்ணும் உடம்பின்
மனங்களில் தான்
எத்தனை பிரிப்பு..

கடந்த கால கசப்பான அனுபவம்
கற்றுத்தந்த பாடங்களை கொண்டு
இனிய நினைவுகளால்
இணைந்திருப்போம்..

மழை விட்டாலும்
சாரல் வீசுவது போல்
இன்னும் கடந்த கால
கசப்பான நினைவுகள் நீங்காத
நினைவலைகளாய்
மாற்றம் ஒன்றே மாறாதது
மாற்றுவோம் நாமும்
எம் எண்ணங்களை
இலங்கையர் என்ற எண்ணத்தில்
ஒற்றுமைப்படுவோம்..

பேதங்கள் மறந்து
பேரன்போடு
பயணிப்போம்..
நடந்தவை கடந்தவையாய்
இருக்கட்டும்
நடப்பவை
நல்லவையாய் அமையட்டும்..

வருடப்பிறப்பில் இருந்து
வசந்தம் வீசட்டும்..
ஒரு தாய் பிள்ளைகளாய்
ஒன்றாய் பயணிப்போம்...




ஏ.எம். கஸ்பியா வீவி
நற்பிட்டிமுனை

# முடியுதிர்வும் அதற்கான சிகிச்சையும்



Dr. ஜலீலா முஸம்மில் MBBS SL
வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை – ஏறாவூர்

கடந்த மாத இதழின் தொடர்ச்சி.....

**16) ஆட்டோ இம்யூன் நிலைமைகள்/ நோய்கள்**

உடலின் நோயெதிர்ப்பு அமைப்பு வீழ்ச்சியடைவதால், நோயெதிர்ப்புக் கலங்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளத் தவறிவிடுகின்றன, மாறாக, அந்நோயெதிர்ப்புக் கலங்கள் அவற்றின் சொந்த மயிர்க்கால்களைத் தாக்குகின்றன. (ஆட்டோ இம்யூன் நோய்). வட்ட வடிவத்தில் முடி உதிர்தலை
ஏற்படுத்தும் இது அலோபீசியா அரேட்டா என்று அழைக்கப்படுகிறது.

**17) தீக்காயங்கள்**

**18) ட்ரைக்கோட்டிலோமேனியா போன்ற நரம்புக்கோளாறு -**
(முடி இழுக்கின்ற மனக்கோளாறு)

இது உச்சந்தலையில், புருவங்கள் அல்லது உடலின் பிற பகுதிகளில் இருந்து முடியை பிடுங்குவதற்கான தொடர்ச்சியான, தவிர்க்க முடியாத தூண்டுதல்களை உள்ளடக்கிய ஒரு மனநல கோளாறு ஆகும். உச்சந்தலையில் இருந்து முடி இழுப்பது பெரும்பாலும் வழுக்கைப் புள்ளிகளை விட்டு விடுகிறது. சிலருக்கு, ட்ரைக்கோட்டிலோமேனியா லேசானதாகவும் பொதுவாக சமாளிக்கக்கூடியதாகவும் இருக்கலாம். மற்றவர்களுக்கு, முடியை இழுக்க வேண்டும் என்ற கட்டாயத் தூண்டுதல் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

**19) உச்சந்தலையில் பக்டீரியா தொற்று**

சில காரணிகள் முடி உதிர்தலுக்கான ஆபத்தை அதிகரித்து விடுகிறது. அவையாவன..

*உங்கள் தாய் அல்லது தந்தையின் வழி வழுக்கை/முடியுதிர்வின் குடும்ப வரலாறு

*வயது

*குறிப்பிடத்தக்க எடை இழப்பு

*சில மருத்துவ நிலைமைகள் - நீரிழிவு மற்றும் லூபஸ்

*மன அழுத்தம்

*மோசமான ஊட்டச்சத்து

**முடி உதிர்தலைக் கண்டறியும் பரிசோதனைகள்**

நீங்கள் முடி உதிர்வால் அவதிப்படுகையில், தோல் மருத்துவரை (தோல் நிபுணர்) அணுகுங்கள். அறிகுறிகளைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறுங்கள். முடி உதிர்தல் காலம் பற்றிய தகவல்களை வழங்குங்கள். முடி உதிர்தல் பகுதிகளை சோதனை செய்து காரணத்தை கண்டறிய முடியும்.

முடி இழுக்கும் சோதனை

முடி மற்றும் நுண்ணறைகளை ஆய்வு செய்தல்

உங்கள் நகங்களில் ஏதேனும் தொடர்புடைய சிக்கல்கள் உள்ளதா என ஆராய்தல்

சாத்தியமான பயாப்ஸி: அரிதான சந்தர்ப்பங்களில், உங்கள் உச்சந்தலையில் இருந்து ஒரு சிறிய தோல் மாதிரி எடுக்கப்பட்டு நுண்ணோக்கியின் கீழ் பரிசோதிக்கப்படலாம்.

**பூஞ்சை தொற்று சோதனை:**

உச்சந்தலையில் தொற்று இருக்கிறதா என்று சோதித்தல்

**இரத்த பரிசோதனைகள்:**

தைரொய்டு செயற்பாடு, தைரொய்டு ஓமோன் அளவுகள் அல்லது நோயெதிர்ப்பு அமைப்பு சிக்கல்கள் மதிப்பீடு செய்யப்படும்.

இந்த வழிமுறைகள் முடி உதிர்வுக்கான காரணத்தைக் கண்டறியவும் சரியான சிகிச்சையை வழிகாட்டவும் உதவும்.

**முடி உதிர்தலுக்கான சிகிச்சை**

பயனுள்ள சிகிச்சைகள் முடி உதிர்தலை மாற்றலாம் அல்லது மெதுவாக்கலாம். படிப்படியாக சரிசெய்து கொள்ள முடியும். 6-9 மாதங்களுக்கு முடி உதிர்தலில் எந்தவித மாற்றமும் இல்லை எனில் அடுத்த கட்ட சிகிச்சையை மேற்கொள்ள முடியும்.

**மருந்துகள்**

மினாக்ஸிடில் (ரோகெய்ன்): திரவ, நுரை அல்லது ஷாம்பூ தோல் மருத்துவர்கள் பரிந்துரை செய்கின்றனர். முடிவுகள் குறைந்தது ஆறு மாதங்கள் ஆகலாம் என்று கூறப்படுகிறது.

∴பினாஸ்டரைடு (ப்ரோபீசியா); ஆண்களுக்கான மருந்து மாத்திரை செயல்திறன் மாதங்கள் ஆகலாம். இதில் பக்க விளைவுகள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன.

**பிற மருந்துகள்:**

ஸ்பைரோனோலாக்டோன் மற்றும் டுடாஸ்டரைடு போன்ற வாய்வழி மருந்துகள்

**மெஸோதெரபி:**

இது இயற்கையாகவே முடி வளர்ச்சியை அதிகரிக்கும். ஊட்டச்சத்துக்கள் மருந்துகள் மூலம் முடி உதிர்தல் தடுக்கப்பட்டு வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது.

**பிளேட்லெட் மற்றும் பிளாஸ்மா சிகிச்சை**

ஊசி மூலம் இரத்த கூறுகள் உட்செலுத்தப்பட்டு முடி வளர்ச்சி அதிகரிக்கப்படுகிறது.

அலோபீசியா அரேட்டா போன்ற நிலைமைகளுக்கு, ஒரு வருடத்திற்குள் முடி இயற்கையாக மீண்டும் வளரக்கூடும்.

**முடி மாற்று அறுவை சிகிச்சை**

சில வகையான முடி உதிர்தலுக்கு அறுவை சிகிச்சை மூலம் தீர்வு கிடைக்கிறது.
முடி மாற்று அறுவை சிகிச்சை முடி உதிர்தலை நிவர்த்தி செய்கிறது. நன்கொடையாளர் பகுதிகளில் இருந்து தனிப்பட்ட முடிகள் அல்லது முடி குழுக்களை அகற்றி முடி அறுவடை செய்யப்படுகின்றது. பின்னர்

முடியை வழுக்கைப் பகுதிகளில் பொருத்துதல் மூலம் நடைபெறுகிறது. இரத்தப்போக்கு அல்லது வீக்கம் போன்ற பக்க விளைவுகள் ஏற்படலாம். முடி உதிர்தல் மரபணுவாக இருந்தால், அறுவை சிகிச்சையானது எதிர்கால உதிர்வை முழுமையாகத் தடுக்காது.

**லேசர் சிகிச்சை**

உணவு மற்றும் மருந்து நிர்வாகம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பரம்பரை முடி உதிர்தலுக்கான சிகிச்சையாக குறைந்த அளவிலான லேசர் சாதனத்தை அங்கீகரித்துள்ளது. சில சிறிய ஆய்வுகள் முடியின் அடர்த்தியை மேம்படுத்துகிறது என்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

**முடி உதிர்தலைத் தடுப்பதற்கு பின்வரும் நடைமுறைகளைப் பேணுவது நல்லது.**

1) ஆரோக்கியமான எண்ணெய் வைத்து உச்சந்தலையில் மசாஜ் செய்யவும்:

நுண்ணறைகளை சுறுசுறுப்பாக வைத்திருக்க இது உதவி செய்கிறது. முடி வளர்ச்சியைத் தூண்டுகிறது.

தேங்காய் உருக்கெண்ணெய் மற்றும் பாதாம் அல்லது எள் எண்ணெய் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

தேங்காய் எண்ணெய் முடியை பலப்படுத்துகிறது மற்றும் பளபளப்பாக்கிறது. கழுவுவதற்கு முன் அல்லது பின் தடவி ஒரே இரவில் விட்டு விடுங்கள்.

2) உடல் நீர்மம் பேணுதல் வேண்டும்
ஆரோக்கியமான முடி வளர்ச்சிக்கு தினமும் 4-8 கப் தண்ணீர் குடிக்கவும்.

3) மது அருந்துவதைத் தவிர்க்கவும்: முடி வளர்ச்சியை மது அருந்துவது குறைக்கிறது.

4) புகைபிடிப்பதை தவிர்க்கவும்:
புகைபிடித்தல் உச்சந்தலையில் இரத்த ஓட்டத்தைக் குறைத்து விடுவதால் முடி வளர்ச்சி மந்தமாகிறது.

5) மன அழுத்தம் இல்லாத வாழ்வு மற்றும் ஓமோன் சமநிலை

உடல் செயற்பாடு:
ஓமோன்களை சமநிலைப்படுத்தவும் மன அழுத்தத்தைக் குறைக்கவும் 30 நிமிடங்களுக்கு நடைப்பயிற்சி, நீச்சல் அல்லது சைக்கிளோட்டம் போன்ற நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள். மன அழுத்தத்தைக் குறைக்கவும், ஓமோன் சமநிலையை மீட்டெடுக்கவும் தியானம் அல்லது யோகா பயிற்சி செய்யுங்கள்.

6) சூடான சூழலில் இருத்தல்
மற்றும் முடி உலர்த்துதலைத் தவிர்க்கவும்:
முடி உதிர்தலுக்கு இது வழிவகுக்கும். முடிப்புரதம் பலவீனமடைவதையும் உடையக்கூடிய தன்மையையும் தடுக்க வெப்பமூட்டும் கருவிகளை அடிக்கடி பயன்படுத்துவதைக் குறைக்கவும்.

7) கற்றாளைச் சாறு தோலைக் குளிர்வித்து மென்மையாக்குகிறது, முடியை நிலைநிறுத்துகிறது, பொடுகை எதிர்த்துப் போராடுகிறது மற்றும் மயிர்க்கால்களைத் திறக்கிறது.

8) விவிஸ்கல் அடர்த்தியான முடி வளர்ச்சிக்கு ஆறு மாதங்களுக்கு தினமும் பயன்படுத்தலாம். கடல் பொருட்களிலிருந்து முடி வளர்ச்சியை ஊக்குவிக்கும் இயற்கையான தயாரிப்பு.
விவிஸ்கல் புதிய கலங்களை மீளுருவாக்கம் செய்வதற்கும் ஏற்கனவே உள்ள கலங்களை வலுப்படுத்துவதற்கும் உகந்தது.

9) மீன் எண்ணெய்: முடியை அடர்த்தியாக்குகிறது மற்றும் இழப்பைக் குறைக்கிறது ஒட்டுமொத்த முடி ஆரோக்கியத்தை அதிகரிக்கிறது.

10) வெங்காய சாறு: வழுக்கைப் புள்ளிகளைக் குணப்படுத்துகிறது மற்றும் முடி வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. கழுவுவதற்கு முன் 15 நிமிடங்கள் வைக்கவும்.

11) ரோஸ்மேரி எண்ணெய் மற்றும்
ஜெரனியம் எண்ணெய் போன்றவைகளும் முடி வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படுகின்றன.




# HMPV
# வைரஸ் என்பது என்ன?

சமீபத்தில் சீனாவில் இருந்து பரவிவருகின்ற HMPV (மனித மெட்டாப்னியூமோவைரஸ்) வைரஸ் பற்றிய அச்சம் மக்கள் மத்தியில் அதிகரித்து வருவதை காண முடிகின்றது. இந்த அச்சத்தைப் போக்கவும், உண்மையான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் இந்தக் கட்டுரை உதவும் என நினைக்கிறேன்.

முதலாவதாக, HMPV என்பது ஒரு புதிய வைரஸ் அல்ல. இது 70 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது, மேலும் இந்த வைரஸ் நெதர்லாந்தில் முதன்முதலில் கண்டறியப்பட்டது. இது கொரோனா வைரஸ் போன்ற ஆபத்தான வைரஸ் அல்ல. இது இலங்கையிலும் ஏற்கனவே சில சமயங்களில் கண்டறியப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளிலும் இந்த வைரஸ் ஏற்கனவே பரவலடைந்துள்ளது. உதாரணமாக, அவுஸ்திரேலியாவில், HMPV ஒரு பொதுவான சுவாச வைரஸ் ஆகும், இது பொதுவாக லேசான சளி போன்ற அறிகுறிகளை ஏற்படுத்துகிறது. 2024 ஆம் ஆண்டில், HMPV சுமார் 8 முதல் 9% பதிவு செய்யப்பட்ட சுவாச நோய்களுக்குக் காரணமாக இருந்தது. நியூ சவுத் வேல் பகுதியில் மட்டும் 2024இல் 1634 நோயாளர்கள் HMPV வைரசினால் தொற்றுக்குள்ளாகி இருந்தனர். மேலும் அவுஸ்திரேலியாவில் ஐந்தாவது இடத்தில் உள்ள சுவாச நோயாக HMPV உள்ளது. (அவுஸ்திரேலிய சுகாதார அமைப்பு) நான் வேலை செய்யும் வைத்தியசாலையில் பல HMPV நோயாளர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். பொதுவாக இந்நோயாளர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கத் தேவையில்லை. இலங்கையைப் பொறுத்தவரை போதுமான புள்ளிவிபரங்கள் இல்லை.

சமீபத்திய அறிக்கைகள், குறிப்பாக குழந்தைகளிடையே, வட சீனாவில் HMPV தொற்று அதிகரித்து வருவதைக் காட்டுகின்றன. இருப்பினும், நிபுணர்கள் இந்த அதிகரிப்பு துல்லியமான புதிய பரிசோதனை முறையை அறிமுகப்படுத்தியதன் காரணமாகவே இந்த அதிகரிப்பு நிகழ்ந்துள்ளதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஐதி கார்டியன்ஸ்

சில மதிப்பீடுகளின்படி, குழந்தைகளில் RSVக்கு அடுத்தபடியாக, HMPV வைரஸ் 5-15% கீழ் சுவாசக் குழாய் தொற்றுகளுக்கு (LRTI) காரணமாக இருக்கின்றது. இலங்கையில், குறிப்பாக கடுமையான சுவாச நோய்த்தொற்றுகளால் (SARI) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளிடையே HMPV தொற்றுகள் பதிவாகியுள்ளன. 2014 ஆம் ஆண்டில், பேராதனை மருத்துவமனையில் நடத்தப்பட்ட ஆய்வில், கடுமையான சுவாசத்தொற்று உள்ள குழந்தைகளிடையே 85.7% HMPV காணப்பட்டது. அநுராதபுர மருத்துவமனையில் 2013-2014 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட மற்றொரு ஆய்வில், 418 ARTIs நோயாளிகளில் 14 பேரில் HMPV கண்டறியப்பட்டது (3.3%).

இதன் அறிகுறிகள் பொதுவாக மிகவும் லேசானவை் சளி, மூக்கு ஒழுகுதல், இலேசான இருமல் மற்றும் சிறிதளவு காய்ச்சல் போன்றவை ஏற்படலாம். பெரும்பாலும் இது தானாகவே குணமாகிவிடும். மிகவும் அரிதாகவே, நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களில் நிமோனியா

ஏற்படலாம், மேலும் மிக மிக அரிதாகவே இறப்பு ஏற்படலாம். எனவே, அச்சப்படத் தேவையில்லை.

HMPV தொற்றைத் தடுக்க, பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கலாம்:

- கைகளை அடிக்கடி சோப்பு மற்றும் நீரால் கழுவுங்கள்.
- கழுவாத கைகளால் உங்கள் முகத்தைத் தொடுவதைத் தவிர்க்கவும்.
- கூட்ட நெரிசலான இடங்களில் அல்லது தொற்று பரவும் இடங்களில் முகக்கவசம் அணியுங்கள்.
- நோய்வாய்ப்பட்டிருக்கும் போது வீட்டிலேயே இருங்கள், வைரஸ் பரவலைத் தடுக்கவும்.
- அடிக்கடி தொடும் மேற்பரப்புகளைச் சுத்தம் செய்யுங்கள்.

HMPV வைரஸுக்கு எதிராக குறிப்பிட்ட அண்டிவைரல் சிகிச்சை இல்லை. சில நாட்களுக்குப் பிறகு அறிகுறிகள் மோசமடைந்தால், சுவாசிப்பதில் சிரமம் அல்லது நீல நிற தோல் (சயனோசிஸ்) போன்றவை அல்லது ஏற்கனவே கடுமையான ஆஸ்துமா அல்லது நாட்பட்ட நுரையீரல் நோய்கள் உள்ளவர்கள் மருத்துவரை அணுக வேண்டும். ஏனையவர்களுக்கு நோய் அறிகுறிகளுக்கான சிகிச்சை மட்டுமே போதுமானது (Symptom contol)

இந்நோய் தொடர்பாக அச்சம் அல்லது குழப்பம் ஏற்பட்டால், தகுதியான மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுங்கள். அங்கீகரிக்கப்பட்ட ஆதாரங்களிலிருந்து மட்டுமே தகவல்களைப் பெறுங்கள். தவறான தகவல்களைப் பரப்புவதைத் தவிர்க்கவும். அமைதியாகவும், விழிப்புணர்வுடன் இருப்பதன் மூலம் இந்த சூழ்நிலையை நாம் சமாளிக்க முடியும்.






Dr. MSM. நுஸைர்,
MBBS, MD

## இளம் கலைஞர் அறிமுகம்

# "திறமைகள் கொண்டு உலகை வெல்வோம்"

### இலக்கிய உலகில் மிளிரும்

# நபீல் அபாபீல்



அண்மைக் காலங்களில் கவனம் செலுத்தும் எழுத்தாளர்களில் ஒருவர்தான் நபீல் அபாபீல். இலக்கியம், ஆன்மீகம், சிறுவர் இலக்கியம், மொழியியல் போன்ற பல்வேறு துறைகளில் எழுதி வரும் இவர், தனது முக்கிய எழுத்தியல் வடிவமாக பத்தி முறையை தனக்கேற்றவாறு சில மாறுதல்களுடன் கையாள்கின்றார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் பாரம்பரிய கிராமங்களில் ஒன்றான கம்பிரிகஸ்வெள கிராமத்தில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை கிராமப் பாடசாலையிலும் பின்னர் தனது உயர்கல்வியை பேருவளை ஜாமிஆ நளீமியா மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கற்ற பிற்பாடு கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகவும் அகரம் சிறுவர் சஞ்சிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றினார். தற்போது றூற்ஸ் அகடமியின் பணிப்பாளராக ஆற்றல்சார் பயிற்றுவிப்பாளராகவும் தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றார். "திறமைகள் கொண்டு உலகை வெல்வோம்" என்ற தொனிப்பொருளில் பயிற்சிப் பட்டறைகளை நிகழ்த்தி வருகின்றார்.

ஆரம்ப காலங்களில் மாணவர்களின் மனதை கொள்ளை கொண்டு, இலட்சக்கணக்கான மாணவர்களின் மனதில் வாசிப்பின் மீதான நேசத்தை விதைத்த விஜய் பத்திரிகையில் தான் தனது முதலாவது சிறுகதையை எழுதியதாக ஆசிரியர் கூறுகின்றார். அதேபோன்று தனது நண்பர்களின் முழுமையான ஆதரவால்தான் தான் எழுத்துலகில் தனக்கான ஓர் இடத்தைப் பெற்றதாக தனது நண்பர்களை நன்றியுடன் நினைவு கூர்கின்றார்.

நபீல் அபாபீல் அவர்களின் எழுத்துக்கள் பட்டை தீட்டப்பட்டது அவரது கல்லூரிக் காலத்திலாகும். சுவர்ச்சஞ்சிகை, தினசரி பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் சிறுகதைகள் எழுத ஆரம்பித்த இவர், தனது நண்பர்களுடன் இணைந்து "பீனிக்ஸ்" என்ற பெயரில் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டார். அதன் பின்பு எழுத்துப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டார்.

நபீல் அபாபீல் இதுவரை சுமார் முப்பதிற்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். இஸ்லாத்தின் காவலர்கள், ஆயிஷாவும் ஆயிரம் நிலவுகளும், அன்புத்தங்கை ஆயிஷாவுக்கு,




மின்மினிகளின் இளவரசி மர்யம், சிறுவர்களுக்கான நபியவர்களின் வரலாறு, அன்பு நபியின் அழகிய அறிவுரைகள், அன்புள்ள அல்லாஹ்வுக்கு, நான்தான் அல்குர்ஆன், அல்லாஹ்வின் அன்புப் பரிசு அல்குர்ஆன், அல்குர்ஆன் உயிரின் நேசம் - உள்ளத்தின் சுவாசம், கட்டுரை நூல்கள், தமிழ் மொழி அலகுப்பரீட்சை நூல்கள் போன்று பல நூல்கள் அவற்றுள் சிலவாகும்.

எழுத்துலகில் நபீல் அபாபீல் தனித்துவம் பெற்றிருப்பதற்கான சில காரணிகளை தெளிவாக குறிப்பிட்டுக் காட்ட முடியும். அவரது எழுத்துக்கள் தனது வாசகர்களுக்கு ஏற்றவாறு பரிணாமம் பெறுகின்றன. நபீல் அபாபீல் சிறுவர்களுக்காக எழுதும்போது தனது எழுத்துக்களை எளிமையாக்கிக் கொள்கின்றார். அதேபோன்று பெரியவர்களுக்காக எழுத முனையும்போது தனது எழுத்துக்களுக்கு இலக்கியச் சாயமும் ரசனையும் தெளித்து அவற்றை அழகு படுத்துகின்றார். அவர் கதை சொல்லும் பாங்கும் அதற்காக அவர் தேர்வு செய்யும் சொற்களும் அவரது எழுத்துக்களுக்கு தனிச்சிறப்பை பெற்றுக் கொடுத்திருக்கின்றன.

அடுத்த இலக்கு தற்போது எழுத்தாளரின் கவனம் நாவல்களின் பக்கம் திரும்பியிருக்கின்றது. கறுப்பி என்ற சமூக நாவலை எழுதி முடித்த கையோடு திகிலூட்டும் மர்மக் கதையை எழுதிக் கொண்டிருக்கின்றார். இந்த வருடம் நாவலில் ஓர் உலா சென்று வரலாம் என்று கூறுகின்றார். அதேபோன்று அவர் இந்த வருடம் எழுத்தாளர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளையும் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.










எழுத்து இல்லாமல் மாணவர்களின் திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை வளர்த்தெடுத்து சாதனையாளர்களாக அவர்களை உயர்த்தும் நோக்குடன் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், வழிகாட்டல் தொடர்கள் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றார். எழுத்து, பேச்சு, தலைமைத்துவம், வடிவமைப்பு என பல்வேறு திறமைகளை மாணவர்களிடம் அடையாளம் கண்டு அவற்றின் மூலம் அவர்களை சிகரங்களுக்கு அழைத்துச் செல்ல அவரது முயற்சிகள் உதவுகின்றன. எனவே தனக்கென தனிப்பாதை அமைத்து வெற்றிநடை போடும் அவரது இலக்கிய பயணம் மென்மேலும் உயர்வடைய வாழ்த்துவதில் துணிந்தெழு சஞ்சிகை பெருமை கொள்கிறது.

தொகுப்பு:
**குலசிங்கம் கிலசன்**
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# பேசும் பேனாக்கள்



நவம்பர் - டிசம்பர் மாதத்திற்கான துணிந்தெழு சஞ்சிகை 37ஆவது இதழ் அண்மையில் வெளிவந்திருந்தது.

அதில் "பேசும் பேனாக்கள்" பக்கத்தில் இடம் பிடித்திருந்த நான்கு நூல்களும் வாசகர்களுக்கு மிக பிரயோசனமான நூல்களாக இருக்கும் என நம்பியதன் விளைவாக 38ஆவது இதழில் சில நூல்களை சிற்றறிமுகம் செய்யலாமென வாசகர் பெருந்தகைகளோடு அறிமுக பரிமாற்றம் செய்து கொள்கிறேன்.

ஒரு பொழுது கூடத் திறக்காவிடினும் சரி, ஒரு மொழிகூடப் படிக்காவிடினும் சரி, நூல்களைப் போல வீட்டை அலங்கரிக்கும் அழகான பொருட்கள் வேறு கிடையாது என்னும் ஸிட்னி ஸ்மிதின் வாசகத்தை நினைவு கூர்ந்தவனாக தொடர்கிறேன்.

முப்பத்தேழாவது இதழைத் தொடர்ந்து வாசகர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற சில பின்னூட்டங்கள் இன்னும் நேர்த்தியாக படைப்புகளை பிரசவிக்க உந்து சக்தியாகவும் உறுதுணையாகவும் இருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி தருகிறது.

ஒரு படைப்பிலக்கியம் அல்லது எழுத்தாளர், கவிஞனது முன்னேற்றத்திற்கு அவனது அடுத்த கட்ட நகர்விற்கு பாரிய அளவில் பங்களிப்புச் செய்வது வாசகப் பெருந்தகைகளால் மட்டுமே இருக்க முடியும் என்பதில் கூடுதல் கரிசனை உள்ளவன் நான் என்றபடியினால் எமது சஞ்சிகை அல்லது எனது குறித்த பகுதி வாசகர்களின் திருப்தியோடும் அவர்களின் எதிர்பார்ப்போடும் நகர்ந்து செல்ல வேண்டும் என அவா கொள்கிறேன்.

அதன் மறுபகுதியாக எமது படைப்புகளை எல்லோரும் விரும்பும் வகையிலான தேர்வுகளோடு படைப்பாக்கம் செய்வதும் அதில் பாரியளவிலான எதிர்பார்ப்புகளையும் மீறி கருத்துகளையும் நல்ல பல சிந்தனைகளையும் விதைத்து விடலாம் என நம்பிக்கையோடு உங்களோடு நகர்கிறேன். உங்களின் மேலான கருத்துக்களை இன்னமும் எதிர்பார்த்துத் தொடர்கிறேன்.

இப்பகுதியில் நீங்கள் எழுதிய சிற்றறிமுகம் அல்லது உங்கள் நூல் பற்றிய குறிப்புகள் இடம் பெற வேண்டுமாயின் உங்களின் ஆக்கங்களை அல்லது உங்களின் நூல்களை எமக்கு அனுப்பி வைக்க முடியும்.



அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-
துணிந்தெழு சஞ்சிகை,
பேசும் பேனாக்கள் பகுதி,
இல 148, வீசி வீதி பெரியநீலாவணை - 02,
மருதமுனை.
தொ.பே.இல.0760200387.




01

நூல்: தப்பிப் பிழைத்த எண்ணங்கள்
நூலாசிரியர்: ஹப்ஸா பஹுமீர்
வகை: கவிதை
பக்கங்கள்: 107
வெளியீட்டகம்: மூதூர் JMI வெளியீட்டகம்
விலை: 500/=
தொடர்பு இல: 0770332575
வெளியீடு: முதல் பதிப்பு 2024 ஏப்ரல்

கேகாலை இறம்புகணை பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட விஞ்ஞான பாட ஆசிரியை கவிஞர் ஹப்ஸா பஹுமீர் எழுதிய இந்த நூலில் 2024இல் வெளியீடு செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நூலில் சுமார் 100 தலைப்புகளில் கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்த நூலை வாசிக்கின்ற போது பல்வேறு ரீதியான உணர்வுப் பரிமாற்றங்கள் சங்கிலிக் கோர்வையாக வாழ்வியலின் யதார்த்தத்தோடு பின்னிப் பிணைந்து வெளிவருவதை வாசகனாக என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. சமூக சிந்தனை பொதுப்படையான சில தலைப்புக்கள், கிராமத்து வாழ்க்கை, உறவு, காதல், பிரியாவிடை, மத சம்பந்தமான போதனை போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக கவிதைகளை இங்கு காண முடிகிறது.

இந்தக் கவிதை பிரதிக்கு இன்னும் கூடுதல் சிறப்பம்சம் நோபல் உலக சாதனையாளர் தமிழ் தொண்டன் பைந்தமிழ் சங்கம் கவிஞர் எம். ஜாகீர் உசேன் அவர்கள் வாழ்த்துச் செய்தி வழங்கியிருப்பதாகும்.

அதுமட்டுமல்லாது, இதில் இடம்பெற்றிருக்கின்ற தலைப்புக்கள் வித்தியாசமாகவும் தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டிருக்கும் கவிதைகள் உணர்வு கோர்வைகளை மெல்லமாய் வருடிச் செல்லும் காந்த வரிகளாக இருப்பதை வாசகனாக என்னால் உணர முடிகிறது. நீங்களும் பெற்று வாசித்து உணர முடியும்.



02

**நூல்: கரையில் மோதும் நினைவலைகள்**
**நூலாசிரியர்: நோயல் நடேசன்**
**வகை: அனுபவப் பகிர்வு (நாவல்)**
**பக்கங்கள்: 312**
**வெளியீட்டகம்: மகிழ்**
**விலை: 1100/=**
**வெளியீடு: முதல் பதிப்பு 2023 டிசம்பர்**

தமிழ் ஈழத்தின் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் படித்து, பட்டம் பெற்ற நூலாசிரியர், எழுத்தாளர், தன் வாழ்வின் வட கிழக்கில் தான் அனுபவித்த வாழ்வியல் சார்ந்த அனுபவங்களையும் தான் தொழில் நிமித்தம் சகோதர மொழி பேசும் மக்களிடையில் பணிபுரிந்த அனுபவங்களையும் பிரஸ்தாபிக்கின்ற ஒரு நூலாக இதைக் கா ண முடிகிறது.

வாழ்வியலில் தான் கடந்து வந்த பாதை மற்றவர்களின் வாழ்வியலோடு ஒப்பீட்டு முறையில் எவ்வாறு இருக்கிறது என்பதை ஒப்பீடு செய்யவும் தன் வாழ்வியலை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் விளிம்பில் அகதிகளாக மக்கள் பட்ட இன்னல்களை சுமார் மூன்று வருடங்கள் முழு நேரமாக அவர்களோடு இருந்து பெற்ற அனுபவங்களையும் இங்கு எழுதியிருக்கிறார்.

சுமார் இருபத்தேழு விதமான தலைப்புகளில் பேசுகின்ற நூல் ஆசிரியர் தான் புலம்பெயர்ந்து 1987 ஜுனில் அவுஸ்திரேலியா சென்ற நினைவுகளையும் 1997 ஆம் ஆண்டு தமிழ், ஆங்கில இரு மொழி பத்திரிகையான உதயம் மாத இதழை நண்பனுடன் இணைந்து சுமார் 13 வருடங்கள் வெளியீடு செய்த அனுபவத்தையும் இங்கு அழகாக சொல்கிறார்.

இங்கு நூலாசிரியரின் மொழியாடல் வாழ்வியலின் அனுபவம் என்பன வாசகனின் கண்ணெதிரே தான் அவைகளை உணர்வது போன்ற விம்ப அலைகளை உருவாக்குகின்ற மிக காத்திரமான படைப்பாக இந்த நூ லை காண முடிகிறது. சுமார் 300க்கும் மேற்பட்ட பக்கங்களில் இடம்பிடித்த இந்த நூல் நிச்சயம் நூலாசிரியரின் வயதோடு தொடர்புடையவர்களுக்கு அவர்களின் வாழ்வியல் அனுபவப் பகிர்வுகளை நினைவூட்ட உதவியாகவும் அவருடைய வயதுக்கு கீழ் பட்டவர்களுக்கு முன்னைய கால வாழ்வின் வாழ்வியல் முறை எவ்வாறு இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளவும் உதவியாகவும் இருக்குமென நம்புகிறேன்.



03




**நூல் :- வானலைகளில் ஒரு வழிப்போக்கன்**

**நூலாசிரியர் :- B.H அப்துல் ஹமீத்**

**வகை :- அனுபவப் பகிர்வு**

**பக்கங்கள் :- 316**

**வெளியீட்டகம் :- தரு மீடியா பிறைவட் லிமிட்**

**வெளியீடு :- முதல் பதிப்பு மே 2022**

**இரண்டாம் பதிப்பு ஜூலை 2023**

உலக அறிவிப்பாளர் என்ற புனைப் பெயரோடு தன் வசீகர காந்த குரலால் தமிழுக்கு அழகு சேர்க்கும் பி.எச்.அப்துல் ஹமீதின் அரை நூற்றாண்டு வாழ்வியல் அனுபவங்களை மக்கள் மையப்படுத்துகின்ற செயற்பாடுகளின் ஒரு வெளிப்பாடு, வானலைகளில் ஒரு வழிப்போக்கன் என்ற இந்த நூலாகும்.

முழுக்க முழுக்க தன் வாழ்வியல் அனுபவங்களை வானொலி அறிவிப்பாளராக தொடர்ந்த அனுபவம் முதல் இன்று வரையில் தான் கடந்து வந்த பாதைகளையும் அதில் உள்ள சுவாரஸ்யமான விடயங்களையும் இதில் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்கள் மிக அழகாக இலகுவான மொழிநடையில் குறித்த நிகழ்வுகளின் புகைப்படங்களோடு எழுதியிருக்கிறார்.

தமிழுக்கும் தாய் மண்ணுக்கும் தனக்கும் உள்ள தொடர்பு, அதோடு கடல் கடந்து பல்வேறு நாடுகளில் தனக்கும் தமிழுக்குமான ஈடுபாடு எவ்வாறு இருக்கிறது என்பதை இந்த நூலின் மூலம் வாசகர்களுக்கு அதையும் கடந்து நேயர்களுக்கு மிக துல்லியமாக காலம், நேரம், இடம் போன்றவைகளை ஆதாரமாக நிறுவி இங்கு நிகழ்வுகளை எழுதியிருக்கிறார்.

தன் வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், பாடல் ஆசிரியர் என பன்முக செயற்பாடுகளில் தன் ஈடுபாடு இன்றுவரை எப்படி இருக்கிறது என்பதை சொல்லுகின்ற இவரது அனுபவப் பகிர்வை நிச்சயம் எல்லோரும் படித்திருக்க வேண்டும். இதில் நிறைய படிப்பினைகளை காண முடிகிறது.

தொகுப்பு:
ஜவ்ஸன் அஹமட்
ஆசிரியர் குழு உறுப்பினர்
துணிந்தெழு சஞ்சிகை




04

**நூல் :– கடல் காற்று கங்குல்**

**நூலாசிரியர் :– மின்ஹா**

**வகை :– கவிதை**

**பக்கங்கள் :– 112**

**வெளியீட்டகம் :– சீர்மை**

**வெளியீடு 2021 டிசம்பர்**

**விலை :– 100 (இந்திய மதிப்பு)**

சீர்மை பதிப்பகத்தின் வெளியீடாக இந்தியாவில் வெளியீடு செய்து வைக்கப்பட்டிருக்கும் இந்த கவிதை, பிரதி சுமார் 111 கவிதைகளை உள்ளடக்கியது. இதில் எல்லாக் கவிதை பிரதிகளையும் போன்று அல்லாத வித்தியாசமான பல்வேறு தலைப்புகளிலான கவிதைகளை காண முடிகிறது. இதில் தலைப்பிடப்பட்டுள்ள அத்தனை தலைப்புகளும் ஆழ்ந்த சிந்தனைக்குள் மனிதனை நகர்த்துச் செல்லக்கூடிய தன்மை வாய்ந்தவை என்பதை வாசகனாக உணர முடிந்தது.

மறைப்பொருளோடு மிக நேர்த்தியான சிந்தனையில் எழுதப்பட்டிருக்கும் இப்படைப்பானது கவிதைகளின் சாயலோடும் இதுதான் கவிதை என்ற வரையறையை விட்டு நீங்கிய கட்டமைப்புகளோடும் காட்சி தருவதை வாசிக்கின்ற போது உணர முடிகிறது.
நன்கு தேர்ச்சி பெற்ற மொழி நடை சொற்களை மிக லாபகமாக கோர்வை செய்கின்ற பாங்கு, ஏதோ ஒரு செய்தியை மற்றவர்களுக்கு சொல்ல நினைக்கின்ற நல்ல சிந்தனை என்பன இங்கு விதைக்கப்பட்டு இருப்பதை காண முடிகிறது.

இந்த நூலை வாசிக்கின்றவர் இலகுவில் இந்த கவிதைகளை புரிந்து கொள்ளும் மனநிலையோடு இருப்பது அரிது என நினைத்த படியினால் ஒன்றுக்கு பலமுறை வாசிப்பு, இந்த நூலுக்கு தேவையென நினைக்கிறேன். அது மட்டுமல்லாது, இந்த நூலை கட்டாயம் படிக்க வேண்டும் என்ற ஒரு நேர் சிந்தனையை உங்களுக்குள் விதைக்கிறேன்.

தொகுப்பு:
ஜவ்ஸன் அஹமட்
ஆசிரியர் குழு உறுப்பினர்
துணிந்தெழு சஞ்சிகை

# அனுபவப் பகிர்வில் ஓர் அழகிய நூல்




நூல் : அல்குர்ஆன் சொல்லும் செய்திகள்
நூலாசிரியர்: முஹம்மத் இம்தியாஸ் (நளீமீ)
தமிழ் மொழிபெயர்ப்பு
பக்கங்கள்: 140
வெளியீட்டகம்: தூரம் பப்ளிகேஷன்.
விலை: 680/=
வெளியீடு : நவம்பர் 2024

அல்குர்ஆன் என்பது அல்லாஹ்வின் வார்த்தைகளாகும். அந்த வார்த்தைகளின் மகிமையினையும் சுவையினையும் இந்த உலகில் எந்த நூல்களாலும் நிரப்பி விட முடியாது. காரணம் அது இறையின் வெளிப்பாடு. மனிதனது லௌஹீகத்தையும் ஆன்மீகத்தையும் நேரிய பாதையில் இணைத்து விடும் அற்புதம் நிறைந்தது.

அந்த வகையில் பலஸ்தீன எழுத்தாளர் அத்ஹம் ஷர்காவி எழுதிய அல்குர்ஆன் சொல்லும் செய்திகள் நூலானது முஹம்மத் இம்தியாஸ் (நளீமி) அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளங்களை இன்புறச் செய்யும் வகையில் வெளிவந்துள்ளது.

அல்குர்ஆனின் வசனங்கள் தான் எத்தனை மகத்துவமானது. அதன் ஒவ்வொரு வார்த்தைகளிலும் மனித இதயத்தினை இதமாக்கி ஒத்தடமிட்டு வளப்படுத்தக்கூடிய உள்ளத்தை தொட்டுவிடும் கருத்துக்களும், நேரிய சிந்தனைகளும் மிகுதியாகவே பொதிந்துள்ளது. எம் இரட்சகனால் பூரணப்படுத்தப்பட்ட வார்த்தைகள் அல்லவா அவை.

நூலின் ஆரம்பத்திலேயே “இறைவா! உனக்குப் பொருத்தமான விதத்தில் நான் தொழவில்லை. தாவூத் (அலை) அவர்களது நோன்பு போன்று நான் பிடிக்கவில்லை. அய்யூப் (அலை) அவர்கள் பொறுமை காத்தது போன்று நான் எனது நோயில் பொறுமை காப்பதும் இல்லை. என்றாலும் நான் உன்னை அவர்களைப் போன்றே நேசிக்கிறேன்.” என்ற வார்த்தைகளின் மூலமாக ஒரு தனி மனிதனின் இயலாமையை உணர்த்தி அவன் இறையின் பக்கம் எவ்வாறு மீண்டு செல்லலாம் என்பதற்கான புத்துணர்வை அளிக்கிறது.

மனிதன் என்பவன் மிகவும் பலவீனமானவன். அவன் இவ்வுலகில் எவ்வாறானவனாக பிரதிபலித்தாலும், தனி ஒருவன் என்ற வகையில், அனைத்து வகையான உணர்வுக்கலவைகளாலும் ஒன்றிணைக்கப்பட்டவனாக படைக்கப்பட்டிருக்கின்றான்.

சில இலகு தன்மைகளாகட்டும், கடினங்களாகட்டும் அவனை மகிழ்ச்சிப் படுத்துகின்றன, சில நேரங்களில் ஆழ்ந்த துன்பத்தில் ஆழ்த்தி விடுகின்றன. யாதாயினும், அவன் அல்லாஹ்வை நேசிக்கும் ஒரு முஸ்லிமான அடியான் என்ற வகையில் முற்றிலுமாக அவன் பக்கம் சார்ந்திருத்தல் அத்தியவசியமானது ஆரோக்கியமானது. இதனை அழகிய முறையில் எடுத்தியம்பும் ஒரு நூலாக அல்-குர்ஆன் சொல்லும் செய்திகள் நூல் தொகுக்கப்பட்டிருக்கிறது.

புத்தகத்தைப் புரட்டியதிலிருந்து இறுதிப் பக்கம் வரை இதயத்தை இதமாக்கி வலிகளால், பிழைகளால் சிதைந்திருக்கும் உள்ளத்திற்கு சிகிச்சையளிப்பது போல அனைத்து அல்-குர்ஆனிய வசனங்களும் மனிதனது ஆன்மாவை தூய்மைப்படுத்தி புத்துணர்வு மிக்க உலகிற்கு அழைத்துச் செல்கிறது.

பாவத்தில் அலைக்கழிந்து தன்னை தாழ்வாகக் கருதி

இருக்கும் ஒருவரை நன்மையின் பால் அழைக்கிறது.

தீய குணாதிசயங்களோடு வலம் வந்து கொண்டிருக்கும் ஒருவரின் சிந்தனையை நற்குணத்தின் பால் தூண்டச் செய்கின்றது. எதிர்காலம் பற்றிய அச்சத்துடன் வாழும் ஒருவருக்கு ஆறுதல் அளிக்கிறது.

மொத்தத்தில் மனிதனின் அனைத்து வகையான உணர்வுகளையும் உள்வாங்கி அதற்கான சிறந்த பாதையை காட்டித் தருகிறது.

யார் எவ்வாறான கண்ணோட்டத்தில் நோக்கினாலும், மனங்களை நோவினையுறச் செய்தாலும், தன்னை மற்றவர்களை சார்ந்திருத்தலில் இருந்து வெளியேற்றி, தனது நடவடிக்கைகள் யாவும் அல்லாஹ்விற்காக என்ற தூய்மையான எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை இந்நூல் பறைசாற்றுகிறது.

அத்துடன் மனிதன் இந்த உலகில் என் நிலையில் பலமானவனாக வாழ்ந்து கொண்டிருந்தாலும், அவனுடைய இறுதிப் பயணம் மரணமாக இருக்கிறது. அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதே ஒரு புத்திசாதுரியமான மனிதனின் முன்னோக்கிய பயணமாக இருக்கும் என்பதனை உறுதி செய்கிறது.

அனைவரும் வாசித்து பயன்பெறக்கூடிய பொக்கிஷமாக அல்-குர்ஆன் சொல்லும் செய்திகள் நூல் திகழ்கிறது.

தொகுப்பு:
முனீரா அப்துல் வாஹித்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# கத்தாருக்கான இலங்கைத் தூதுவராக திருமதி சிதாரா கான் நியமனம்






இலங்கையின் புதிய வெளிநாட்டு இராஜதந்திர தூதுவர்களை நியமிக்கும் நிகழ்வு டிசம்பர் (07) ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், 20 வருடங்களை விட அதிக அனுபவம் கொண்ட இராஜதந்திர அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர். அதன்படி, கத்தார் நாட்டிற்கான இலங்கைத் தூதுவராக திருமதி சிதாரா கான் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், முன்னதாக கனடாவில் உள்ள இலங்கை தூதரகத்தில் துணை உயர்ஸ்தானிகராக பணியாற்றியுள்ளார். திருமதி சிதாரா கான் அவர்களுக்கு ஸ்கை தமிழ் ஊடகம் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறோம்

# வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றார் சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான என்.எம். அமீன் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஊடகத்துறையில் சாதனையாளர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு ஜனவரி (07) மவுண்ட்லாவினியா ஹோட்டலில் (Mount Lavinia Hotel) நடைபெற்றது.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து ஏற்பாட்டு செய்த "சிறந்த பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் விழா" இம்முறை 25ஆவது தடவையாக நடைபெற்றது.

இதன் போது சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருமான என். எம்.அமீன் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

களனிய பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர், 1976ஆம் ஆண்டில் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் "தினமணி" பத்திரிகையில் ஆசிரியர் பீடத்திலிருந்து தனது ஊடக பயணத்தை ஆரம்பித்தார்.

24 வருடங்கள் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் பணியாற்றிய இவர், பாராளுமன்ற அறிக்கையிடுபவராகவும் கடமையாற்றினார். தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரியில் செய்தி ஆசிரியராகவும் அப்போது கடமையாற்றினார்.

அங்கிருந்த காலத்தில் அனைத்து தமிழ் வெளியீடுகளிலும் முகாமைத்துவ ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

பின்னர் "நவமணி" பத்திரிகையில் பிரதம ஆசிரியராகவும் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

1995இல் முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கென ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரமொன்றையும் உருவாக்கினார். தற்போதும் அவர் அதன்




தலைவராகவும் செயற்படுகின்றார். பல்வேறு தேசிய சர்வதேச ஊடக அமைப்புக்களின் அங்கத்தவராக இருந்து இவர் ஊடகத்துறைக்கு பங்களிப்பு செலுத்தியுள்ளார்.

தெற்காசிய ஊடக சுதந்திரம் (SAFMA)வில் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளராக இருந்த இவர், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் 22 வருடங்களுக்கு மேலாக அங்கம் வகித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடகவியல் கற்கைநெறிக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழகம், Sri Lanka College of Journalism, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஆகியவற்றிலும் வருகைதரு விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகம், தென் கிழக்குப் பல்கலைகழகம், இலங்கை இதழியல் கல்லூரி மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் என்பவற்றில் ஊடகவியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான வருகைதரு விரிவுரையாளராகவும் இவர் பணியாற்றி வருகின்றார்.

என்.எம்.அமீன் ஊடகத்துறையில் மட்டுமல்லாது, சமூக சேவையிலும் தன்னை இணைத்துக் கொண்ட ஒருவராகத் திகழ்கிறார். அந்த வகையில் இவர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவராக சேவையாற்றியுள்ளதோடு, முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவராக தற்போதும்





பணியாற்றி வருகிறார். அவர் தனது சேவைக் காலத்தில் அமெரிக்கா, பிரித்தானியா, பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, ஈரான், ஜப்பான், குவைத், மாலைதீவு, நேபாளம், ஓமான், பாகிஸ்தான், கட்டார், சவூதி அரேபியா, துருக்கி போன்ற பல நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

35 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியாபோரம் இன்று 1000 அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்பாக இருக்கின்றது. இவரது மேலதிக சேவைகளில் முக்கியமாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகவியலாளர்களுக்காக நடத்தப்படுகின்ற டிப்ளோமா பாடநெறி ஆரம்பத்தில் சிங்களத்தில் மட்டும்தான் இருந்தது. இவர் விடுத்த வேண்டுகோளை அடுத்து இது இப்போது தமிழிலும் நடத்தப்படுகின்றது. இதன்மூலம் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் டிப்ளோமா பட்டதாரிகளாக மாறி இருக்கிறார்கள். இது இவரது பணியில் முக்கிய மைல் கல் எனலாம்.

அதே போன்று இலங்கை முஸ்லிம்களுக்காக தினசரிப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கின்ற பணி இவருடைய கனவாக இருந்தது. அதன்படி இவர் நவமணிப் பத்திரிகையில் பணிபுரியும் போது நவமணிப் பத்திரிகையை தினசரிப் பத்திரிகையாக ஆரம்பித்து, பல வருடங்கள் வெளியிட்டார். துரதிஷ்டவசமாக கொரோனா நெருக்கடியை அடுத்து இப்பத்திரிகை மூடப்பட்டது.

இவரது மூன்று பிள்ளைகளில் மூத்த மகன் அஸாம் அமீன் இலங்கையிலும் உலகத்திலும் புகழ்பெற்ற ஓர் ஊடகவியலாளராக இருக்கிறார். அத்துடன் இரண்டாவது மகன் அஸீம் ஒரு பட்டதாரி என்பதுடன் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராகப் பணியாற்றுகின்றார். அதேபோன்று இவரது மகள் ஒரு பட்டதாரி என்பதோடு, அவர் தற்போது லண்டனிலே மேற்படிப்பு படித்துக் கொண்டிருக்கிறார். இவரது மனைவி நஸ்லிமா அமீன் கொழும்பு டி.எஸ். சேனாநாயக்க கல்லூரியில் தமிழ் பிரிவு பொறுப்பாசிரியராக இருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

இவர், அரநாயக்க தல்கஸ்பிட்டியைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர் மர்ஹூம் நிசாமுதீன் உடையார் தம்பதிகளின் மூத்த புத்திரர் ஆவார்.

தற்போது உதயம் என்ற நிகழ்நிலை பத்திரிகையின் பிரதம ஆசிரியராக சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.அமீன் பணிபுரிகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு:
**எம்.எஸ்.எம்.ஸாகிர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை



# உடவளவை தேசிய பூங்கா

இலங்கையின் சப்ரகமுவ மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களின் இரத்தினபுரி மாவட்டத்தின் அண்மித்த பகுதியில் உடவளவை தேசிய பூங்கா அமைந்துள்ளது.



உடவளவை தேசிய பூங்கா நாட்டின் ஈரமான மற்றும் உலர் வலயங்களில் அமைந்துள்ள பூங்காவாகும். இது ஒக்டோபர் முதல் ஜனவரி வரை மற்றும் மார்ச் முதல் மே வரையிலான மழை காலங்களுக்கு வெளியே ஒப்பீட்டளவில் வறண்டதாக இருக்கும். உடவளவை நீர்த்தேக்கத்தின் இடது கரை, இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. மற்றும் அதன் கிழக்குப் பகுதி வலது கரையில் மொனராகலை மாவட்டத்தில் உள்ளது. தெற்கு எல்லை உடவளவை தனமல்வில வீதியால் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வீதிக்கு தெற்கே செவனகல சீனி தொழிற்சாலைக்குரிய தோட்டம் உள்ளது.

இது 1972 ஆண்டு ஜுன் 30ஆம் திகதி வளவை ஆற்றின் நீரேந்துப்பகுதியை பாதுகாக்கும் நோக்கில் இத்தேசிய பூங்கா அமைக்கப்பட்டது.

இத்தேசிய பூங்கா இலங்கையின் ஐந்தாவது தேசிய பூங்காவாக நிறுவப்பட்டதாகும்.

உடவளவை தேசிய பூங்கா ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, இலங்கையின் முழு சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் பெருமளவில் பங்களித்திருக்கின்றது. அதேவேளை, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட இலட்சக்கணக்கான பார்வையாளர்களை வெற்றிகரமாக ஈர்த்துள்ளது.

பூங்கா மொத்தம் 306 சதுரக் கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டது.

இப்பூங்கா வளவை நீர்த்தேக்கம், சதுப்பு நிலங்கள், வளவை ஆறு மற்றும் அதன் கிளை நதிகள், காடுகள் மற்றும் திறந்த புல்வெளிகள், சிறிய தேக்கு மரக்காடுகள் போன்ற நுண்ணிய வாழ்விடங்களை உள்ளடக்கியது.

இது இலங்கையின் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் உடவளவை பிரதேசத்தை வனவிலங்கு சரணாலயத்திற்கு மேலதிகமாக தேசிய பூங்காவாக உத்தியோகபூர்வமாக உருவாக்கப்பட்டது. உடவளவை தேசிய பூங்காவின் நீர் தேக்கம், கிட்டத்தட்ட 3,500 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட மொத்த பரப்பளவை உள்ளடக்கியது, இது அருகிலுள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும், மேலும் இது “வளவை நீர்த்தேக்கம்” என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்நீர்த்தேக்கம் மேலும் உடவளவ தேசிய பூங்காவிற்கு வலு சேர்க்கின்றது.

பூங்காவில் 400க்கும் மேற்பட்ட ஆசிய





யானைகள் இருக்கின்றன. காட்டு யானைகளை இங்கு இலகுவாகப் பார்வையிட முடியும். மேலும் இங்கு சிறுத்தைகளும் காணப்படுகின்றன. முதலை, பொன்நிற நரி, நீர் எருமை, மயில், தீக்கோழி, காட்டுப்பூனை, மான், தேவாங்கு, பாம்புகள், புல்லிப்பூனை, காட்டுப்பன்றி, சோம்பல் கரடி வித விதமான பட்டாம்பூச்சிகள் போன்றவை இங்கு முக்கியமாகக் காணப்படுகின்றன.

உடவளவை தேசிய பூங்காவின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பட்டியல் இவ்வாறு வகுக்க முடியும்.

உடவளவை தேசிய பூங்காவில் 184 வகையான பறவைகள் (அவற்றில் 33 இடம்பெயர்ந்தவை), 94 வகையான தாவரங்கள், 21 மீன் இனங்கள், 12 நீர்வீழ்ச்சிகள், 33 ஊர்வன, 43 பாலூட்டிகள், மற்றும் 135 வகையான பட்டாம்பூச்சிகள், ஆசிய யானைகளின் அற்புதமான ஒன்றிணைந்த செயற்பாடுகள். உடவளவை இலங்கையில் வனவிலங்கு சுற்றுலா மற்றும் இலங்கையில் பறவைகள் கண்காணிப்பு சுற்றுப்பயணங்களுக்கு சிறந்த தேசிய



பூங்காக்களில் ஒன்றாகும். திறந்தவெளி புல்வெளிகள் அதிகமாக இருப்பதால் இலங்கை யானைகள் இங்கு திறந்தவெளி வாழ்விடங்களில் காணப்படுகின்றன. கைவிடப்பட்ட யானைக் குட்டிகளைப் பராமரிப்பதற்காகவும், 1995 ஆம் ஆண்டு முதல் மீட்கப்பட்ட கன்றுகளை வனப்பகுதிகளில் ஒருங்கிணைக்கவும் உடவளவை போக்குவரத்து இல்லம் நிறுவப்பட்டது.

உடவளவை தேசிய பூங்காவில் சுற்றுலா பயணிகளுக்கான நடத்தை விதிமுறைகள் கவனிக்கப்பட வேண்டியவை. இங்குள்ள விலங்குகளுக்கு உணவளிக்காதீர்கள் அல்லது பூங்காவிலிருந்து எந்தப் பொருளையும் எடுக்காதீர்கள் (தாவர பாகங்கள், எலும்புகள், பாறைகள் போன்றவை) உடவளவை தேசிய பூங்காவில் உங்கள் ஜீப் சவாரியின் போது கடுமையான மௌனத்தையும், அமைதியையும் கடைபிடிக்கவும்.

உங்கள் வாகனத்தை விட்டு வெளியேறவோ, ஜன்னல் வழியாக சாய்ந்து அல்லது கூரையில் ஏறவோ வேண்டாம். உங்கள் வாகனத்திலிருந்து குப்பைகளை வெளியே எறியாதீர்கள், தயவுசெய்து அனைத்து குப்பைகளையும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். உடவளவை தேசிய பூங்காவிற்குள் புகைபிடிப்பது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. உடவளவை தேசிய பூங்காவிற்குள் நான்கு சக்கர வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன, மேலும் அவை மணிக்கு 25 கி.மீ. வேகத்தில் அதிகபட்ச வேக வரம்பைப் பராமரிக்க வேண்டும்.

மெதுவாக வாகனம் ஓட்டுவது பறவைகள், ஊர்வன மற்றும் பாலூட்டிகள் போன்ற சிறிய விலங்குகளை கண்காணிக்க உதவுகிறது. உடவளவை தேசிய பூங்காவில் உங்கள் ஜீப் சவாரியின் போது உங்கள் ஓட்டுனர் மற்ற வாகனங்களுக்கு இடையூறாகவோ அல்லது விலங்குகளின் நடமாட்டத்திற்கு இடையூறாகவோ இல்லை என்பதை உறுதிப்படுத்தவும்.

இந்தத் தேசியப்பூங்காவை உள்நாட்டவர்கள் மட்டுமின்றி, அதிகமான வெளிநாட்டவர்களும் பார்வையிடுவதற்காக ஆண்டு தோறும் வருகை தருகின்றார்கள். ஆகவே உங்களுடைய பயணங்களையும் திட்டமிட்டு சிறப்பாக அமைத்து மகிழுங்கள்.

எஸ்.ஐ.எம்.நிப்ராஸ் (JP)
ஊடகவியலாளர்

# வரலாற்றுச் சுவடு

1399ஆம் ஆண்டு இந்தியப் படையெடுப்புக்குப் பின்னர் தனது புதிய தலைநகரான சமர்கந்தில் ஒரு பள்ளிவாசலைக் கட்டுவதற்கு பேரரசர் மகா தைமூர் (Timur The Great) முடிவு செய்திருந்தார்.

அதன் வெளிப்பாடாக சமர்கந்த் நகரில் பீபீ கானிம் பள்ளிவாசல் கண்ணைக் கவரும் வண்ணம் மேலெழுப்பப்பட்டது.

1404ஆம் ஆண்டு தைமூர் தனது படையெடுப்பிலிருந்து திரும்பிய போது பள்ளிவாசலின் நிர்மானப் பணிகள் கிட்டத்தட்ட பூர்த்தியடைந்திருந்த போதும், அதன் வடிவமைப்பு தைமூருக்கு திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை. உடனடியாக முகப்பில் பல்வேறு மாற்றங்களைச் செய்து அதனை மேலும் மெருகூட்டினார்.

அது தொடக்கம் பல்லாண்டு காலத்திற்கு இஸ்லாமிய உலகின் மிகப் பெரிய மற்றும் அற்புதமான பள்ளிவாசல்களில் ஒன்றாக அது திகழ்ந்து வந்தது. இன்றும் உஸ்பகிஸ்தானின் சமர்கந்தில் இவ் எழில்மிகு பள்ளிவாசல் வீற்றிருக்கிறது.

தற்போதைய உஸ்பகிஸ்தானிலுள்ள திரான்சாக்சியானா (Transoxiana) எனும் பகுதியில் வாழ்ந்து வந்த ஒரு நாடோடி இனக்குழுவில் பிறந்து, "தைமூரியப் பேரரசு" எனும் உலகின் மிக வலிமையான சாம்ராச்சியங்களில் ஒன்றைத் தோற்றுவித்தவர் தைமூர்.

பிறப்பின் போது அடையாளமற்றவன் என்ற நிலையில் இருந்து, இறப்பின் போது தனிமனிதனாகத் தோற்றுவித்த சாம்ராச்சியம் மாத்திரம் ரோமப் பேரரசுக்கு நிகரானது.

பரப்பளவில் மிகப் பிரமாண்டமானதொரு பேரரசைக் கட்டியெழுப்பியது மட்டுமன்றி, கலை இலக்கியம், பண்பாடு, அறிவியல் என ஏகப்பட்ட துறைகளின் புரவலராகவிருந்த தைமூர், அவ் அனைத்தையும் ஒன்று திரட்டியதொரு தனித்துவமான நாகரிகத்தை உருவாக்கி விட்டுச் சென்றிருந்தார்.

வெவ்வேறு சதுரங்க விளையாட்டு திரிபுருகளில்



ஒன்றான "டெமர்லேன் செஸ்" (Tamerlane Chess) என்றழைக்கப்படும் சதுரங்கத் திரிபுருவைக் உருவாக்கியவரும் தைமூர் ஆவார். இது 1011 பலகையில் விளையாடப்படும்.

தைமூர் என்றால் சகதை மொழியில் "இரும்பு" எனப் பொருள்படும் (Chagatai Language) (சகதை மொழியே தைமூரின் தாய்மொழி. தற்போது இம்மொழி வழக்கொழிந்து விட்டது). குழந்தைப் பருவத்தில் தைமூர் தனது நண்பர்களுடன் சேர்ந்து செம்மறி ஆடு, குதிரை முதலிய கால்நடைகளைக் கொள்ளையடிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். 1363ஆம் ஆண்டு வாக்கில் கால்நடை மேய்ப்பாளர் ஒருவரிடமிருந்து செம்மறி ஆட்டைத் தைமூர் திருடுவதற்கு முற்பட்ட போது, இரண்டு அம்புகளால் தாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அவ் அம்புகளில் ஒன்று, வலது காலையும், மற்றொன்று வலது கையையும் தாக்கின. இதன் காரணமாக வலது கையில் இரண்டு விரல்களை இழந்ததுடன், காலில் ஏற்பட்ட காயம் அவரை ஆயுள் முழுவதும் ஊனமுற்றவராக மாற்றியது. வலது காலைத் தாங்கித் தாங்கி நடப்பவராகவே தைமூர் இருந்தார்.

அதே போல, சிற்றரசர் ஒருவரின் கூலிப்படையாகத் தைமூர் பணியாற்றிக் கொண்டிருந்த போது,

இக்காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் சில வரலாற்றாசிரியர்கள் கருத்துரைக்கின்றனர். எது எப்படி இருப்பினும், தைமூர் ஊனமுற்றவராய் இருந்தார் என்பது மாத்திரம் நிதர்சனம்.

1370ஆம் ஆண்டளவில் சகதாயி கானரசின் (Chagatai Khanate) மேற்குப் பகுதியை தைமூர் வெற்றிகொண்டதன் பின்னர், அதனைத் தளமாகக் கொண்டு சாம்ராச்சியத்தை விரிவுபடுத்தும் படையெடுப்புக்களை மேற்கொண்டார். தைமூரின் இராணுவம் பல்வேறு இனப் படை வீரர்களைக் கொண்டிருந்தன. இவரது படையினர் ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களைப் பெரிதும் மிரள வைத்தன. ஒவ்வொரு நாட்டு மன்னரும் தைமூரின் படை இன்று வருமோ நாளை வருமோ எனப் பேரச்சத்துடன் தமது நாட்களைக் கழித்தவர்களாக இருந்தனர்.

தைமூரின் இந்தியா மீதான படையெடுப்பின் போது தில்லி சுல்தானகம் பேரழிவைச் சந்தித்தது. தலைநகர் தில்லி சூரையாடப்பட்டு சிதிலம் ஆக்கப்பட்டது. தைமூரின் படையெடுப்பு நிறைவடைந்த நாள் தொடக்கம் கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு தில்லி நகரில் ஒரு பறவையையேனும் காணக் கிடைக்கவில்லை என வரலாற்றாசிரியர்கள் விபரிக்கின்றனர்.

1402ஆம் ஆண்டு உதுமானியப் பேரரசின் மீது படையெடுத்த தைமூர், உதுமானியப் பேரரசை வெற்றி கொண்டு, மன்னர் பயேசித்தைக் (Bayezid 1) கைது செய்தார். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் மன்னர் பயேசித் மரணித்தார்.

இவ்வாறாகத் தைமூரின் படையெடுப்புக்கள் கணிசமான பகுதிகளில் பேரழிவுகளை ஏற்படுத்தியிருந்தன. இவ் அழிவுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் முழுமையாக மீள்வதற்கு பல நூற்றாண்டுகள் எடுத்தன. தைமூரின் படையெடுப்புகள் பெருந்திரளான மக்களின் இறப்புக்குக் காரணமாயிருந்ததாக நம்பப்படுகிறது.

1404ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மிங் சீனாவுக்கு (Ming Dynasty) எதிராக இராணுவ நடவடிக்கைகளைத் தைமூர் மேற்கொள்ள ஆரம்பித்தார். பொதுவாகத் தைமூர் தனது இராணுவ நடவடிக்கைகளை இளவேனில் காலத்தில்தான் மேற்கொள்வார். இம்முறை தனது வழக்கத்திற்கு மாறாக குளிர்காலத்தில் நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். சிர் தாரியா (Syr Darya) ஆற்றிலிருந்து தொலைதூ-ரப் பகுதியில் முகாமிட்டிருந்த போது உடல்நலக் குறைவு ஏற்பட்டு, சீன எல்லையைக் கடக்கும் முன்னரே 17 பெப்ரவரி 1405ஆம் ஆண்டு தைமூர் மரணித்தார். மரணத்தின் போது தைமூர் என்பவர் வாழ்நாளில் தோல்வியையே கண்டிராத படைத்தளபதி மற்றும் அரசர் அலெக்ஸாண்டர், ஜூலியஸ் சீஸர், டாரியஸ் எனப் பெரும் பெரும் பேரரசர்களை எல்லாம் விஞ்சிய மூலோபாயவாதி மற்றும் தந்திரோபாயவாதி.

தைமூரின் மரணத்திற்குப் பிறகு, அவரது உடலானது கஸ்தூரி மற்றும் பன்னீர் பூசிப் பாதுகாக்கப்பட்டு, லினன் துணியால் கபனிடப்பட்டு, கருங்காலி மரத்தாலான பாடையில் ஏற்றப்பட்டு, சமர்கந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது, அங்கு அடக்கம் செய்யப்பட்டது. குர்-எ-அமீர் (Gur-e-Amir) என்றழைக்கப்படும் அவரது அடக்கஸ்தலம் இன்றும் சமர்கந்தில் எழுந்து நிற்கிறது.

தைமூரின் தோற்றம் எப்படியிருந்தது, தைமூர் ஊனமுற்றவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றுத் தகவலின் சரிநிலை எப்பேற்பட்டது என்பதை எல்லாம் ஆய்வு செய்யும் நோக்கோடு சோவியத் விஞ்ஞானி மிக்கைல் மிக்கைலோவிச் செராசிமோவின் (Mikhail Mikhaylovich Gerasimov) வேண்டுகோளுக்கு இணங்க, 1941ஆம் ஆண்டு தைமூரின் உடல் தோண்டியெடுக்கப்பட்டது. தைமூரின் வலது கையில் இரண்டு விரல்கள் துண்டிக்கப்பட்டிருந்தமையும், கால் ஊனமுற்றிருந்தமையும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டன.

தைமூரின் மண்டை ஓட்டிலிருந்து அவரது முகம் மறுசீரமைக்கப்பட்டது. ஆய்வுப் பணிகள் நிறைவடைந்த பின்னர், உடல் மீண்டும் கபனிடப்பட்டு, ஜனாஸாத் தொழுகை நிறைவேற்றப்பட்டு, அவ்விடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. பிற்காலத்தில் முகலாய சாம்ராச்சியத்தை தாபித்த பாபர், தைமூரின் 5ஆவது தலைமுறையாவார்.

**எம். எஸ். எம். ரஸ்மி**
**மாவனல்லை**



எம்.ஆர். முஹம்மட் அஸ்லான்
வயது - 04

# சிறுவர் பகுதி.....



நிழா பைஸி
தரம் - 07
டி.எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலை

தொகுப்பு:
பயாஸா பாஸில்
ஆசிரியர் குழு
துணிந்தெழு சஞ்சிகை

# கண்டு கொள்ளப்படாத அப்பா பாசம்

“பட்டர் தடவி பாண் சாப்பிட ஆசையா இருக்குதும்மா”..... என்றேன் அம்மாவிடம். ஏதோ நான் தகாத வார்த்தைகள் உபயோகித்ததைப்போல் கடுகடுப்பான அம்மா தன் முகத்திலுள்ள சகல அங்கங்களாலும் சைகை செய்து ஏதோ சொன்னாள். அதை விளங்காத நான் “என்னம்மா.....?” என்றேன். சட்டென அருகே வந்தவள் தன் கையால் என் வாயைப் பொத்தியவளாய் குனிந்து என் காதருகில் “அப்பாவுக்குக் கேட்டிடும், மெதுவாய்ப்பேசு.”

“அப்பாவின் நிதி நிலமை இந்நாட்களில் மிக மோசம் கொஞ்ச நாட்கள் கழித்து வாங்கித் தருவேன் பொறுத்திரு.” மிக மெதுவாகவே சொன்னாள். வெளியே கதவுக்கு மிக அருகில் அமர்ந்திருந்த அப்பாவுக்கு கேட்டிடாமல் போலும். அப்பா சுகயீனமுற்ற பின் மாதக்கணக்காய் வேலைக்கு விடுப்பு எடுக்க நேர்ந்ததில் எங்களுக்கு முன்பைவிட பணக்கஷ்டம்தான். நான் அறியேனா ?

தினமும் வேலைக்குச் செல்கையில் அப்பா போய்வருதற்கு பஸ்கட்டணத்துக்கு சரியாக மட்டுமே பக்கெற்றில் பணம் எடுத்துச்செல்வார். அப்பாவுக்கு இரவு வேலை. மாலையில் அப்பா சென்றபின் அப்பாவின் வேலையில் உள்ள கஷ்டம், வீட்டு நிதி நிலவரம் என்பவற்றை அம்மா என்னிடம் சமர்ப்பிப்பதை வழக்கமாய்க் கொண்டிருந்தாள்.

இன்றும் அப்பா வேலைக்குச் சென்றபின் அம்மா சற்று அதிகமாகவே வீட்டு நிலவரம் சொல்லலானாள். நானும் “சரியம்மா நானினி பட்டர் தடவி பாண்தின்ன ஆசை என்றெல்லாம் சொல்லமாட்டேன்” என சொன்னபின்தான் அம்மா அமைதியானாள் கண்களில் நிரம்பிய கண்ணீரைத் துடைத்தவளாய். மறுநாள் காலை வேலைவிட்டு வீடு வந்த அப்பா ஒரு பையை அம்மாவிடம் நீட்டி என்னை சாடை செய்தார். வாங்கிப் பார்த்தேன் அதில் சுடச்சுட பாணும் குளிரக் குளிர பட்டரும். “ஏதுங்க பணம் யாரிடமாவது கைமாறோ?” எனக் கேட்டாள் அம்மா. “இன்று நடந்து போய் நடந்தே வந்தேன். புள்ள காதுல விழுந்திடாம...... அத வெட்டி நிறைய பட்டர் தடவி பிள்ளைக்கு கொடு நீயும் திண்ணு” என்றார் அப்பா.

மனதினுள் எண்ணிக் கொண்டேன் “எழுதுற எல்லாருமே அன்புக்கு அம்மா என்றெழுதுவது எப்படித்தான் நியாயமோ......?”




தொகுப்பு:
பயாஸா பாஸில்
ஆசிரியர் குழு
துணிந்தெழு சஞ்சிகை

# அறிவின் அமுதம்



கண்ணுக்குத் தெரியாத ஒரு களஞ்சியம்
கனவுகளை நனவாக்கும் விளக்கு
வாழ்க்கைப் பயணத்தில் நமது வழிகாட்டி
அறியாததை அறியச் செய்யும் சாவி!

பள்ளிக்கூடம் ஒரு மாபெரும் கடல்
அதில் நாம் எல்லாம் சிறு துளிகள்
அறிவின் அமுதத்தை அருந்தி வளர்கிறோம்
புதிய உலகை நோக்கி பயணிக்கிறோம்!

நூல்கள் நம் நண்பர்கள்
ஆசிரியர்கள் நமது வழிகாட்டிகள்
கல்வி ஒரு வெளிச்சம்
இருளை நீக்கி ஒளிரச் செய்யும்
வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டும்
கல்வியே நமது உயரிய இலக்கு!

அறிவு பெற்றால் உலகம் சிறக்கும்
நாம்தான் அதற்கு விதை!

ஆர். எம். பாத்திமா நஸ்ரியா
அநுராதபுரம்

தொகுப்பு:
பயாஸா பாஸில்
ஆசிரியர் குழு
துணிந்தெழு சஞ்சிகை

# கத்தாரில் பிரம்மாண்டமாக நடைபெற்ற சிக்டா விருதுகள் 2024

கத்தாரில் சிக்டா விருதுகள் இந்த வருடம் டிசம்பர் 20ஆம் திகதி கத்தாரின் புகழ்பெற்ற கத்தார் தேசிய மாநாட்டு மையத்தில் (QNCC) பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியானது சிக்டா நிறுவனர் மற்றும் இயக்குநரான சாதிக் பாஷா அவர்களால் மிக விமர்சையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா ஆகிய மாநிலத்தில் உள்ள கத்தார் வாழ் ஆளுமைகளை இவ்விருதுகள் 8 பிரிவுகளில் கௌரவித்தன. மேலும் இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக, தென்னிந்திய திரையுலகின் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவை பிரபல நடிகை குஷ்பூ, நகைச்சுவை நட்சத்திரம் யோகி பாபு, கன்னட தயாரிப்பாளர் ராக்லைன் வெங்கடேஷ், பல்துறை திறமை கொண்ட நடிகர்கள் அசார் மற்றும் டி.எஸ்.கே, நடிகை அம்மு ராமச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினரும் நடிகையுமான சுமலதா அமர்நாத், நடிகர் விமல், விசுவநாத், மற்றும் குணச்சித்திர நடிகர் ரியாஸ் கான் ஆகியோரின் வருகையால் நிகழ்ச்சியானது தனிச்சிறப்பைப் பெற்றது.

இந்த நிகழ்வில் 2500க்கும் மேற்பட்ட ரசிகர்கள் கலந்து, விழாவைச் சிறப்பித்தனர். தென்னிந்தியர்களின் கலாசார மற்றும் கலைநடைமுறைகளைக் கொண்டாடும் சிக்டா விருதுகள், வளர்ந்து வரும் திறமைகளை ஊக்குவிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகத் திகழ்கிறது







தொகுப்பு:
ஹப்ஸா பஹூமீர்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# கத்தாரின் இலங்கை பெண்கள் சங்கம்

## ஏற்பாடு செய்த விற்பனை சந்தை மற்றும் சமையல் போட்டி




கத்தாரின் இலங்கை பெண்கள் சங்கம் டிசம்பர் 20ஆம் திகதி, விற்பனை சந்தை மற்றும் சமையல் போட்டி நிகழ்வுகளை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வுகள் பல்வேறு மக்களை ஒன்றிணைத்து, உள்ளூர் முயற்சிகளை ஆதரிக்கவும், உறுப்பினர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும் உதவியாக இருந்தன.

புரவலர் டாக்டர் ஷெசூன் மொஹிதீன் தலைமை விருந்தினராக பங்கேற்ற இந்த நிகழ்வுகள், கத்தாரில் உள்ள இலங்கை சமூகத்தில் சிறப்பான உற்சாகத்தை ஏற்படுத்தின.

**விற்பனைச் சந்தை:**

விற்பனை சந்தையில் ஆடைகள், புத்தகங்கள், வீட்டுப் பொருட்கள், பழங்கால பொக்கிஷங்கள் போன்ற பல்வேறு பொருட்கள் காணப்பட்டன. இதன்மூலம் கிடைக்கும் வருமானமானது சங்கத்தின் தொண்டு முயற்சிகளுக்காக வழங்கப்படவுள்ளது.




**சமையல் போட்டி:**

சமையல் போட்டியானது இலங்கையின் பாரம்பரிய உணவுகளை மையமாகக் கொண்டிருந்தது. இப்போட்டியில் பங்கேற்பாளர்கள் தமது சமையல் திறன்களை வெளிப்படுத்தி கலகலப்பான மற்றும் சுவையான நிகழ்வாக அமைந்தது.

இந்நிகழ்ச்சியின் நடுவர்களாக ஹில்டன் ஹோட்டல் உணவு நிபுணர்களான செஃப் ஜானக சமரசேகர மற்றும் இசுரு லக்ஷன் செயற்பட்டனர்.

இவ்விரண்டு நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்று முடிந்தன. இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களை முன்னோக்கிக் கொண்டு செல்ல உதவியாக இந்நிகழ்வுகள் இருந்தன.
இந்நிகழ்வின் ஊடக அனுசரணையாளராக ஸ்கை தமிழ் ஊடகமானது செயற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு:
ஹப்ஸா பஹுமீர்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# இலங்கையில் முதன்முறையாக முழு பெண் பணியாளர்களைக் கொண்ட சுற்றுலா ஹோட்டல் தம்புள்ளையில் திறப்பு



தெற்காசியாவின் சுற்றுலாத்துறையில் ஒரு திருப்புமுனையாக ஜனவரி 10 ஆம் திகதி இலங்கையில் முதன்முறையாக முழுமையான பெண் பணியாளர்களைக் கொண்ட சுற்றுலா ஹோட்டலான “Amba Yaalu" (அம்ப யாலு) பிரம்மாண்டமாகத் திறக்கப்பட்டது.

தம்புள்ளை கந்தளம நீர்த்தேக்கத்தின் அருகில் மாமரம் தோட்டத்துக்கு மத்தியில் அமைக்கப்பட்ட இவ்ஹோட்டலானது, இலங்கையின் சினிமா பொற்காலத்தின் தழுவலாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
இவ் ஹோட்டலை "Thema Collection" நிறுவனம் உருவாக்கியுள்ளனர். ‘Amba Yaluwo’ நாவலை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட இவ்ஹோட்டலானது, பழங்கால சினிமாவினை பிரதிபலிக்கும் முகமாக அமைக்கப்பட்டுள்ளது. இவ்ஹோட்டலில், பாரம்பரிய கலைமயமும் உணர்வூட்டும் அனுபவங்களும் இங்கு வருகைதருபவர்களுக்கு கிடைக்கும்.

மேலும், பாதுகாவலர், நிர்வாக குழு, சமையல்காரர்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் ஹோட்டலைப் பராமரிப்பவர்கள் அனைவருமே பெண்கள் என்பதே இச்சுற்றுலா ஹோட்டலின் தனிச்சிறப்பாகும்.

தொகுப்பு:
ஹப்ஸா பஹ்ஹீர்
இணையாசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

## உங்கள் விளம்பரங்களையும்
## குறைந்த கட்டணத்தில்
## இப்போதே பகிர்ந்து கொள்ளுங்கள்

0757000791 | +97431060249



#Thuninthelu www.skytamilnews.com